803. NOVEMBER 1926 Vol. [illegible] No. 4

4-JAN 1927
MADRAS

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள் :
ஸ். முத்தையா & கோ., சென்னை.

ரூ. 2. வெளிநாடு ரூ.

பெயர்பெற்ற

"அன்ஸோனியா"

ஜோபி கடிகாரங்கள்

பார்வைக்கு
அழகான
மத்திய சயிஸ்.

அன்ஸோனியா கம்பெனியின் கடி...
அதிசம் விவரித்துக் கூறவேண்டியதில்லை. மே...
யாரால் செய்யப்பட்ட புது மாதிரியான
லிவர் ஜோபி கடியாரங்கள் நம்மிடம் விற்பனை...
இருக்கின்றன. அதிகம் பெரிதல்லாத, பா...
கான சயிஸ், பளிங்கியை யொத்த பள பள...
சொற்ப கடிகாரங்களே வந்திருப்ப...
கொள்வது நலம்.

மூன்று வருஷத்திற்கு உத்திரவா...

விலை ரூ. 6—12—0 தான்

S. Muthiah

Export Dept

BOX 99

லக்ஷ்மி புஸ்தகசாலை.

இனிய தமிழ் நாவல்களும், கதைகளும்.

ஸ்திரீ புருஷ ரகசியம்	...	1	8	0
கப்பற் கொள்ளைக்காரர்கள்	...	1	4	0
இல்லற இன்ப ரகசியம்	...	0	10	0
ஆனந்த மேகன்	...	1	8	0
சுவர்ணம்புஜம்	...	0	8	0
பண்டிதை மெஸ்மெரிஸ்ஸா	...	1	8	0
விஷதாரி	...	1	4	0
பத்மநாபன்	...	0	14	0
தாரா	...	0	10	0
மர்மமுகி	...	0	12	0
கபட சந்நியாசி	...	0	14	0
வஜ்ர லேகை	...	1	4	0
தீனதயாளு	...	0	12	0
பாணபுரத்து வீரன்	...	1	0	0
ராஜ ராஜேஸ்வரி	...	1	8	0
[illegible]ீமராவ்	...	0	10	0
[illegible]ீஜாபாய்	...	1	4	0
[illegible]காமளா அல்லது கைலாசய்யரின் கெடுமதி	...	0	12	0
[illegible]வதவல்லி	...	0	5	0
[illegible]ணசுந்தரம்	...	1	4	0
[illegible]லசுந்தரம்	...	1	0	0
[illegible]லப நாச்சியார்	...	1	4	0
[illegible]லர்சுந்தரி	...	0	12	0
[illegible]த்மலோசனி	...	0	12	0
[illegible]ஜாமணி	...	0	12	0
[illegible] வீரராகவர்	...	0	8	0
[illegible]ராம்பாள்	...	0	12	0
[illegible]ளா	...	1	0	0

மதிமோச விளக்கம்

[illegible]தென்னிந்தியாவில் நடை பெறும், சோதிடர் சூழ்ச்சி, [illegible]சாரிப்புரட்டு, வைத்தியர் மோசம், வக்கீல் அலங்கார சூழ்ச்சி [illegible]மாசங்கள் முதலியவைகளை விரிவாக எடுத்துக் காட்டுவது.

விலை ரூ. 1 0 0

தபால் பெட்டி, 99
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, **மதராஸ்.**

A

Lakshmi Book Depot.

நாவல் எழுதுவதில் பெயர் பெற்ற

வடுவூர்-கே. துரைசாமி ஐயங்கார் B. A.

அவர்களால் எழுதியவைகள்.

		ரூ.	அ.
மாயாவிநோதப் பரதேசி	1-ம் பாகம்	5	0
ஷை	2-ம் பாகம்		
விலாஸவதி	1-ம் பாகம்	3	0
ஷை	2-ம் பாகம்		
மதனகல்யாணி	1-ம் பாகம்	4	8
ஷை	2-ம் பாகம்		
ஷை	3-ம் பாகம்		
பூர்ணச் சந்திரோதயம்	1-ம் பாகம்	7	8
ஷை	2-ம் பாகம்		
ஷை	3-ம் பாகம்		
ஷை	4-ம் பாகம்		
சௌந்திரக் கோகிலம்	1-ம் பாகம்	3	12
ஷை	2-ம் பாகம்		
மேனகா	1-ம் பாகம்	3	0
ஷை	2-ம் பாகம்		
கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பர சாமியார்	1-ம் பாகம்	3	0
ஷை	2-ம் பாகம்		
பாலாமணி அல்லது பக்காத் திருடன்		2	8
வஸந்த மல்லிகா		1	
வித்தியாசாகரர்		1	
திலோத்தமா		0	
மாணிக்க வாசகர்		0	
கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலை மகளும்		2	12
வஸந்த கோகிலம்		1	0
மாயா சுந்தரி		0	12
திவான் லொடபடசிங் பகதூர்		0	12

POST BOX No. 99.
188, Govindappa Naick St., **MADRAS.**

இனிய தமிழ் நாவல்களும், நாடகங்களும்

ராவ்சாகிப் T. M. பொன்னுசாமி பிள்ளை யவர்கள்

இயற்றியவை

	ரூ.	அ.		ரூ.	அ.
சிவஞானம்	1	4	ஞானப்பிரகாசம்	1	8
ஞானசம்பந்தம்	1	4	கமலாக்ஷி	1	12
ஞானம்பிகை	1	8	விஜய சுந்தரம்	2	8

ராவ்சாஹிப்

P. சம்பந்த முதலியார் அவர்கள் B. A., B. L. இயற்றிய

தமிழ் நாடகங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
பேயல்ல பெண்மணியே	0	8	காதலர் கண்கள்	0	12
காலவரிஷி	0	8	மெய்க்காதல்	0	12
யயாதி	0	8	சத்ருஜித்	0	12
கோனேரி அரசகுமாரன்	0	8	வணீபுரவணிகன்	0	12
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்	0	8	லீலாவதி சுலோசன	0	12
			மனோகரன்	0	12
வேதாள உலகம்	0	8	கள்வர் தலைவன்	0	12
ரஜபுத்திர வீரன்	0	8	சுந்தரி	0	12
பிரஹஸனங்கள்	0	8	வள்ளிமணம்	0	12
நற்குலதெய்வம்	0	8	இரண்டு நண்பர்கள்	0	14
சாரங்கதரன்	0	8	ரத்னவளி	0	14
சிறுத்தொண்டர்	0	8	ஹரிச்சந்திரன்	1	0
கீதமஞ்சரி	0	8	புத்தர்	1	0
சந்திரஹரி	0	8	சபாபதி 1 & 2	1	0
மார்க்கண்டேயர்	0	10	விரும்பிய விதமே	1	0
பொன் விலங்குகள்	0	10			

கண்ணகியின் சாபம்

அழகிய தமிழ் நடையுடன் எழுதப் பட்டது. இப் புஸ்தகத்தைப் படித்து அநேகர் டிராமா நடத்துகிறார்கள். இதன் ஆசிரியர் P. S. முருகேச முதலியா ரவர்கள். விலை அணா 8

ஆயிரம் தலை வாங்கிய அதிசய சிந்தாமணி

பிரபஞ்ச அநுபவங்களும் இயற்கையின் உண்மைகளும் உலக அதிசயங்களும் ஆழ்ந்த கற்பனைகளும் ததும்பிய இனிய தமிழ் நாவல். விலை ரூபா 1.

லக்ஷ்மி புஸ்தகசாலை, 188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,

தபால் பெட்டி 99 மதராஸ்.

பச்சை மோதிரத்தின் மர்மம்

காதல் ததும்பும் இனிய அற்புதமான தமிழ் நாவல். படிப்பவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் அளிக்கக் கூடியது. புதிதாக வெளியாயிருக்கிறது. சுத்தப் பதிப்பு.
விலை ரூ. 1.

மணிவடக் களவு

பட்டப் பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தின மாலையைத் திருடி மறைந்த ஒரு சுந்தர மாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஓர் அற்புதமான துப்பறியும் கதை.
விலை அணா 4.

பங்கஜம்

இது ஒரு அழகிய சிறு கதை. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. வயது முதிர்ந்தவர்கள் இளம் பெண்களை விவாகம் செய்வதால் ஏற்படும் இடுக்கண்களை விரிவாக எடுத்துக் கூறுவது.
விலை அணா 2.

குயில்மொழி

ஒரு சிறுமியைப் பற்றிய சிறப்பான கதை. தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்கு இதைவிட மன வெழுச்சியைக் கொடுக்கக் கூடிய கதை இல்லவே இல்லை.
விலை அணா 2.

எனது காங்கிரஸ் யாத்திரை

இந்தியாவின் சுதந்திரத்தை விரும்புவோரெல்லாம் அவசியம் படித்தறிய வேண்டிய நூல். தற்காலத் தேசாபிமானிகளின் தன்மையை வெட்டனத் திறந்து காட்டுவது. அழகிய நடை.
விலை அணா 3.

லக்ஷ்மி தாலாட்டுக் கோவை

நான்கு விதத் தாலாட்டுகள் அடங்கியது. தமிழ் நாட்டுத் தாய்மார்களுக்கு ஏற்றது.
விலை அணா 3.

மனோகரி

இது பெயருக்கேற்பவே ஒரு மனோஹரமான நாடகம். கற்பின் மகிமை, புருஷ தம்பதிகளின் சுக வாழ்வின் ரகசியங்கள், இல்லற தருமங்கள் முதலியன இதில் தெளிவுற விளக்கப்பட்டுள்ளன.
விலை அணா 8.

லக்ஷ்மி புஸ்தகசாலை, 188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு
தபால் பெட்டி, 99 மதராஸ்.

Lakshmi Book Depot.

விசித்திர தேவலோகக் கோர்ட்டு

இங்கிலாந்துக்குப் போய் அங்கே உயர்தரப் பரீட்சைகளிற் தேர்ச்சி யுற்று வரும் தமிழ் நியாயாதிவாதிகள் தங்களது தாய்ப் பாஷையாகிய தமிழை மறந்து கோர்ட்டுகளில் பேசுகிறதையும் எழுதுகிறதையும் மிகு விநோதமாகத் தெரிவித்திருக்கிறது. இது படிப்பவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கும். விலை அணா 0 8 0

சரீர மர்ம சாஸ்திரம்

(ஒரு மானிட இன்ப நூல். 5ம்-பதிப்பு.)

தமிழ் பாஷையில் இவ்வளவு பூர்ணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப்பட வில்லை. இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், அவர்களது அவயவங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும் ரதி மன்மத சிருங்கார ரஹசியங்களும், ஆண் பெண் சிசு உற்பத்தி விபரமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதை போக்கத் தக்க சிகிச்சைகளும், மஹரிஷிகளால் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும், விவாகமானவர்களுக்கும், இனி மேல் விவாகஞ் செய்துக்கொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல். 64 சித்திரப் படங்களுடன் கூடியது. விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்

இது கொக்கோகக் கோலம் என்னும் நூலின் விரி நூலாகும். இதில் ஒவ்வொருவரும் அநுபவிக்க வேண்டிய இன்ப சுகம் பூரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அநேக படங்களுடன் கூடியது. விலை ரூ. 2 4

அத்யாத் ராமாயணம்

விஸ்வாமித்திர மகா ரிஷியால் அருளிச் செய்தது. தமிழ் வசனம். விலை ரூபா 2 8 0

சம்பூரண ராமாயணம்

இது வால்மீகி சுலோகம், கவியின் விருத்தம், திவ்ய பிரபந்த விருத்தத்துடனும், கீர்த்தனை, இந்துஸ்தான், பார்ஸி வர்ணமெட்டுக ளமைந்த பாட்டுகளுடனும் சம்பூர்ணமாக எழுதியிருக்கிறது. சம்பூரண ராமாயணம் பாராயணம் செய்பவர்களுக்கு மிகுந்த பிரயோஜன முள்ளது. விலை ரூபா 1

POST BOX No. 99.
188, Govindappa Naick St., **MADRAS.**

லக்ஷ்மி புஸ்தக சாலை,

கருப்ப சாஸ்திரம்

இதில் சுமார் 250 விஷயங்கள் அடங்கியிருக்கின்றன

இதில் காலமறிந்து கலியாணஞ் செய்யு முறையும், பாலிய விவாகத்தின் கெடுதி யுணரு மார்க்கமும், தேகபலம் வீரிய சக்தி முதலியனவுள்ள சந்ததிகளை யடையும் விதங்களும், கர்ப்பத்தி லிருப்பது ஆண் பெண் ஆகிய இரண்டினுள் இன்ன தென்றறி முபாயமும், தம் மனோபாவனையின்படி ஆண் பெண் உற்பத்தி யாக்கிக்கொள்ளுந் தன்மையும் ஸ்திரீ புருஷர் மலடாவதின் காரணமும் இன்னும் இவைபோன்ற பற்பல விஷயங்கள் விபரமாக எடுத்துக் காட்டி யுள்ளன.

அநேக படங்களுடன் கூடியது. விலை ரூ. 1 8 0

சுந்தரலிங் (அல்லது) பாஸ்கர விலாஸ் படுகொலை

ஆச்சரியத்தையும் புத்தி சூக்ஷ்மத்தையும் உண்டாக்குவதில் இதற்கு இணை எதுவும் இல்லை யென்றே கூறலாம். பாஸ்கர வம்சத்தவர்கள் ஒன்றன் பின் ஒருவராய் கொல்லப் படுவதும் கடைசியாக துப்பறியும் சிங்கம் சுந்தர்லிங் கொலையாளியைக் கண்டு பிடிப்பதும் படிக்கப் படிக்க இனிமையா யிருக்கும்.

இதன் விலை ரூபா 1—8—0.

பாய் பரமானந்தன்

நவீனங்கள் மலிந்து விளங்கும் நமது நாட்டில் தேச பக்தியைப் புகட்டக் கூடிய நவீன புஸ்தகம் இது. தேச பக்தர்களுக்கு அறிவை விளக்கி ஆனந்த மளிப்பது. விலை ரூபாய் 1

மஹேந்த்ர ஜாலம்

ருஷ்யா தேசத்தின் வனாந்தரப் பிரதேசங்களில் ஜனித்து, பால்யத்திலிருந்தே, ஸ்திரி லோலனா யலைந்து பாதிரி வேடம் பூண்டு, உயர்குலப் பெருமாட்டிகளையும், குற்ற மற்ற இளங் கன்னிகைகளையும், கற்பழித்து, ருஷ்ய அரச குடும்பத்தையும், தனது மாயவலைக் குட்படுத்தி ராஜாங்கத்தில் உயர்பதவி யடைந்து அந்நாட்டையே கறங்குபோல் ஆட்டி யலைத்த ரஸ்புட்டின் என்னும் பெரிய மாய ஜாலச் சண்டாளன் ஒருவனது ஜீவிய சரித்திரம். படிக்க மிகவும் ருசிகரமா யிருக்கும்.

இதன் விலை அணா 0 12 0

தபால் பெட்டி 99,
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

Lakshmi Book Depot.

"தையல் சுந்தரம்"

அழகிய அமைப்புக்களுடன் கூடிய இனிமையான தமிழ் நாடகங்களுள் முதன்மை பெற்ற நாடகமாகுமிது. சுருங்கச் சொல்லின் இது பால் போல் ருசிப்பது! தேன் போல் இனிப்பது!! அணுவளவும் திகட்டாதது!!! உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன. ஆலசியம் செய்வது ஏமாறச் செய்யும்.

விலை ரூபா 1 0 0

"சுந்தரவதனி"

அல்லது

தர்மமே ஜெயமளிக்கும்.

(ஓர் இனிய துப்பறியும் நவீனம்)

நவீன கதைகளை அதி ஆர்வத்துடன் வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்கு இந்நாவல் நல்ல விருந்தாகும். கதா நாயகியான சுந்தரவதனி படுந்தொல்லைகளும், கடைசியில் தர்மமே ஜெயிப்பதும் படிக்கப் படிக்கப் பரமானந்தத்தையும், பரமாச்சர்யத்தையும், உண்டு பண்ணும். பல துப்பறியும் நாவல்களில் தீரராய் விளங்கும் கஜபதிக்கு விவாகம் நேர்வதும் இந்நாவலில் தான். இதில் இன்சுவையும் எளிய நடையும் ததும்பி நிற்பதால் அனைவர்க்கும் இது ஆனந்த மளிக்குமென்பதிற் றடையில்லை. தடிப்பான காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கும் இப்புத்தகத்தின் விலை அணு 0 12 0 தான்.

லக்ஷ்மி பைண்ட் புஸ்தகம்

லக்ஷ்மி மூன்றும் வருடத்து அதாவது, மலர் 3, நம்பர் 1 முதல் 12 ஸஞ்சிகைகளும், ஒன்றுசேர்த்து மிகவும் அழகாகப் பைண்டு செய்துள்ளது தயாராக இருக்கிறது. வேண்டுவோர் வரவழைத்துக்கொள்ளலாம். அறிவைக் கொடுக்கும் அநேக விஷயங்கள் அடக்கியுள்ளன.

மலர் 3 பைண்டு செய்த புஸ்தகம் 1-க்கு	ரூ.	3 0 0
மலர் 1 ,, ,, ,,	ரூ.	3 0 0

குறிப்பு:—மலர் இரண்டு பைண்டு செய்தது இல்லை, செலவாகி விட்டன.

POST BOX No. 99.
188, Govindappa Naick St., MADRAS.

லக்ஷ்மி புஸ்தக சாலை.

தமிழ் சட்ட புஸ்தகங்கள்

	ரூ.	அ.
ஸ்டாம்பு ரெஜிஸ்ட்ரேஷன், பலவிதப் பத்திரங்கள் எழுதும் மாதிரிகள் அடங்கிய விவகார சிந்தாமணி	2	8
உயில் பாகம், வார்சு பாத்தியம் ஸ்திரீதன முதலிய துள்ள பெரிய ஹிந்து லா	2	0
சிவில் லா	3	0
கிரிமினல் லா	3	0
புது கிராம முனிசீப் சட்டம்	1	8
கிராமப் பஞ்சாயத்துச் சட்டம்	1	2

	ரூ.	அ.
லோக்கல் போர்டு ஆக்ட்	1	8
இந்தியன் பினல்கோட்டு	3	0
ஹிந்து தர்ம ஸ்தாபன சட்டம்	1	0
டிரஸ்ட்டி ஆக்ட்	0	10
கிராம சுகாதாரம்	0	2
நில ஆக்கிரமிப்புச்சட்டம்	0	4
கால நிர்ணய ஆக்ட்	0	8
பரம்பரை கிராம உத்தியோக ஆக்ட்	0	10
புதிய ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
இன்கம் டாக்ஸ் சட்டம்	1	0
ஸ்டாம்பு ஆக்ட்	0	12

நீங்கள் வெகு நாட்களாக எதிர் பார்த்தது

வந்து விட்டது! வெளியாகி விட்டது!!

சௌந்தர கோகிலம்

இரண்டாம் பாகம்.

நண்பர்களே! நீங்கள் வெகு நாட்களாக எதிர்ப்பார்த்திருந்த புஸ்தகம், சௌந்தரக் கோகிலம் இரண்டாம் பாகம் இப்பொழுது வெளியாகி விட்டது. ஸ்ரீமான். வடுவூர். K. துரைசாமி அய்யங்கார் அவர்கள் இதன் ஆசிரியர். படிக்கப் படிக்க இனிப்பையும், ரசத்தையும் அளிக்கக்கூடியது, இதன் முதற் பாகமும், எம்மிடம் கிடைக்கும். தவிர இந்த ஆசிரியரால் எழுதப்பட்ட எல்லா புத்தகங்களும், எம்மிடம் கிடைக்கும். வேண்டுவோர் உடனே எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சௌந்தர கோகிலம் இரண்டாம் பாகம் ரூ. 2—4—0
,, ,, முதல் பாகம் ரூ. 1—8—0

தபால் பெட்டி, 99
188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

B

சுய ராஜ்யமே

நமது லக்ஷயம்!

சுய ராஜ்யத்தை நாம் அடைய விரும்பினுல் சுதேசக் கைத் தொழிலே ஆதரிப்பது இன்றியமையாத தன்ருே ... ... ?

வீணுக அன்னிய நாடுகளி லிருந்து செய்து வரும் பித்தளே டம்ளர்களே வாங்கி ஏன் நஷ்டப்பட வேண்டும் ... ... ?

காசியில் செய்யும், பித்தளே டம்ளர், கூஜா முதலியவைகளே வாங்கி, இந்தியக் கைத் தொழிலே ஏன் ஆதரித்தவர்க ளாகக் கூடாது... ... ... ?

விலேயில் குறைவும், உழைப்பில் சிறப்பு முள்ள, நமது டம்ளர்களே ஒரு முறை வாங்கி உபயோகிப்பீர்களானுல் இதன் உண்மை விளங்கும் ... ... !

நகாஸ் வேலே செய்த பித்தளே டம்ளர்கள் :—

உயர்ந்த பித்தளே கெட்டித் தகட்டில் நானு விதமான நகாஸ் வேலேகள் செய்தது. மூன்று டம்ளருள்ள செட் 1-க்கு ரூபா 1—12—0.

சாதா டம்ளர்கள் :—

நகாஸ் வேலேக ளில்லாத பிளயின் டம்ளர்கள், அதிக பளபளப்பு உள்ளது. செட் 1-க்கு விலே ரூபா 1—10—0.

கே. எஸ். முத்தையா கம்பனி

ஸில்க் ஹவுஸ் :: :: ஸ்ரீ காசி.

N. S. S.

உங்கள்

குழந்தைகளை நேசிக்கிறீர்களா?

நேசிப்பதாயின்,

இன்றே உங்கள் குழந்தைகளுக்கு
பித்தளை விளையாட்டு சாமான்
செட் ஒன்று வாங்கிக் கொடுங்கள்!



குழந்தைகளைக் குதூகலப்படுத்த இதைவிட விளையாட்டுக் கருவிகள் சிறந்தது வேறொன்றுமில்லை. குழந்தைகள் மனதை ரமிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில் சமையல் செய்யும் — பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளவை. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32— சாமான்கள் உள்ளன. அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு மிகுந்த பளபளப் போடிருக்கும்.

நெ. 1. ஜோடிப்பு
விலை ரூபா 4—8—0

நெ. 2. ஜோடிப்பு
விலை ரூபா 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பனி,

ஸில்க் ஹவுஸ் :: :: பனாரஸ் ஸிடி.

N. S. S.

போன், வெள்ளி மெடல்கள் பரிசுடன் புகழப்படும்
ரிஜிஸ்டர்டு & மெடிகேடெட்

கே. எஸ். சுகந்த மூக்குத் தூள்.

உபயோகிக்கத் தவற வேண்டாம்

ஒற்றைத் தலைநோய், பீனிசம், மண்டைக் குத்தல், ஜலதோஷம், இன்னும் கண்டத்திற்கு மேல் பட்ட அநேக ஜன்ம வியாதிகளை சொஸ்தப்படுத்தும்.

புட்டி 1-க்கு ரூ. **0—4—0**
டஜன் 1-க்கு **2—4—0**
சேர் 1-க்கு **1—8—0**
(V. P. சார்ஜ் வேறு)

K. S. சாகிபுவின் அசல் பட்டணம் பொடி.

வீசை 1-க்கு ரூ. **3—0—0**
(டின் & V. P. சார்ஜ் வேறு)

சொந்தக்காரர்

K. சுல்தான் முஹையதீன் சாயபு

தபாற்பெட்டி 260, நெ. 8 அப்பு மேஸ்திரி வீதி, சென்னை.

மிகவும் உறுதியான



பாக்கெட் கடிகாரம்

இக் கெடிகாரம் மணியைச் சரியாகக் காட்டக்கூடியது. மிகவும் உறுதியானது. நீடித்து உழைக்கக்கூடியது. அநேகர் எழுதி வரவழைத்துள்ளார்கள். இரண்டு வாரத்தில் இக் கடிகாரம் இருநூறு உள்ளூரிலேயே செலவாகிவிட்டன. ஒவ்வொருவருக்கும் பாக்கெட் கடிகாரம் அவசியம் வேண்டும். ஆகையால் ஒரு கடிகாரத்துக்கு உடனே ஆர்டர் அனுப்புங்கள். விலை ரூபா **6 8 0**

R. S. PAUL & Co.,
211, Jan Jani Khan Road,
Royapettah, MADRAS.

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

பத்திராசிரியர் . K. S. சுந்தரம்.

மலர் ச. அக்ஷயஹு கார்த்திகைமீ 1926 நவம்பர்மீ இதழ் ச.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	145
2.	புதிய ஆத்தி சூடி	146
3.	உருவ வணக்கம்	147
4.	அகில ஆசை அனுபவிப்பதால் அடங்கிவிடுமா?	159
5.	நரி விருத்தக் கதைகள்	163
6.	மதங்களும் மாமிஸ போஜனமும் ...	169
7.	உறக்க மில்லா வாழ்வு	177
8.	கதிரவன் எழும் காலைக் காட்சி	182
9.	ரகுமாரன்	185
10.	பொது விஷயங்கள்	191
11.	லக்ஷ்மி பஞ்சாங்கம் : கார்த்திகைமீ மார்கழிமீ	195

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210363
சென்னை 600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

இந்தியா, பர்மா, ரங்கூன், சிலோன் முதலிய உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 0
சிங்கப்பூர், பினங்கு, ஆப்பிரிக்கா முதலிய போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 8

தனிப்பிரதி விலை அணு 3.

கவனிப்பு

நமது லக்ஷ்மி ஒவ்வொரு மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும் அந்தந்த மலரின் முதல் ஸஞ்சிகையி லிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் இந்தியாவிலுள்ள நேயர்கள் 10 தேதிக்குள்ளும் கப்பல் பிரயாணத்தையுடைய நாடுகளிலுள்ள நேயர்கள் 15-தேதிக்குள்ளும் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

எவ் விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லட்டர் எழுதினாலும் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் கவரில் குறிப்பிட்டிருக்கும்.

லக்ஷ்மியில் பிரசுரிப்பதற்கு விஷயங்கள் அனுப்ப விரும்பும் நேயர்கள் ஒவ்வொரு மாதம் 15-தேதிக்குள் மையினுல் எழுதி யனுப்ப வேண்டும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினுல் மாறுதல் விலாசத்தை 25-ந் தேதிக்குள் சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

லக்ஷ்மியில் உள்ளூர் விளம்பரங்களும், வெளியூர் விளம்பரங்களும், பிரசுரிக்க எடுத்துக் கொள்ளப்படும். சார்ஜ் விஷயமாக, ஆபீஸுக்கு எழுதியாவது நேரிலாவது பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்.

லக்ஷ்மி ஆபீஸ்,

188, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,

டெலிபோன் 2692 மதராஸ்.

லக்ஷ்மி துதி

கடங் கொண்ட நீரிரு குஞ்சர

மாட்டக் கமலமலர்

இடங் கொண்டுவாழு மோ ரேந்திழையே

செல்வ மியாவு நின்பொற்

றடங் கொண்ட சென்னியினார் சொந்தமே

யெனது சாற்று முண்மைத்

திடங் கொண்ட வென்னைக் கருதா

தெங்கி யார்க்கிதஞ் செய்குதியே.

புதிய ஆத்திசூடி.

(பாரதி)

(முன் தொடர்ச்சி.)

தவத்தினை நிதம் புரி
நன்று கருது
நாளெலாம் வினை செய்
நினைப்பது முடியும்
நீதிநூல் பயில்
நுனியளவு செல்
நூலினைப் பகுத்துணர்
நெற்றி சுருக்கிடேல்
நேர்படப் பேசு
நையப் படை
நொந்தது சாகும்
நோற்பது கைவிடேல்
பணத்தினைப் பெருக்கு
பாட்டினில் அன்பு செய்
பிணத்தினைப் போற்றேல்
பீழைக் கிடங் கொடேல்
புதியன விரும்பு
பூமி யிழந் திடேல்
பெரிதினும் பெரிது கேள்
பேய்களுக் கஞ்சேல்
பொய்ம்மை யிகழ்
போர்த் தொழில் பழகு
மந்திரம் வலிமை
மானம் போற்று
மிடிமையில் அழிந்திடேல்
மீளுமா றுணர்ந்து கொள்

உருவ வணக்கம்

(4-7-26-ல், தர்பன், பாய்ண்டு இந்திய வாலிபர் சங்கத்தில் திருவாளர் கோ. இராமசாமி அவர்கள் உபந்நியாசித்தது.)

கடவுள் படைப்பு

இந் நெடிய உலகையும், இதில் எழு வகைத் தோற்றம் எண்பத்து நான்கு லக்ஷ யோனி பேதங்களையும், படைத்துக் காத்து அழித்து வருபவர் கடவுள் ஒருவரே! அவர் அவதாரங்கள் தோறும் வேறு வேறு உருவமும் பெயரும் பெறுவார். இத் தரணியில் கால்வாய், ஆறு, மலை, குன்று, தாவரம், அங்கு மிங்குந் திரிந்து வாழும் உயிர்த் தொகுதிகள் எல்லாம் அனந்த பேதங்களாய் இருப்பதைக் காண்கிறோம்.

இதுபோலவே ககனத்தில் காணப்படும் பெரிய பெரிய வெள்ளிகளும், பெரிய பெரிய உலகங்க ளென்றும், அவ் வுலகங்களிலும் இம் மண்ணுலகில் இருப்பன போல் குன்று, மலை, கால்வாய், ஆறு, தாவரம், இயங்கி வாழும் ஜீவ கணங்களும் இருக்கின்றன் வென்று வான சாஸ்திரிகளும் ஞானிகளுங் கூறுகின்றனர்.

வேறு உலகங்கள்

அப்படியாயின் மனிதர் இன்ப துன்பங்களை யெல்லாம் இப் பூவுலகில் அநுபவித்தலால், இதைவிட வேறு உலகங்க ளில்லையே எனின், அப்படி யல்ல. ஆன்றோ ரெல்லோரும் வேறு உலகங்கள் இருப்பதாகவே கூறுகின்றனர். அழகிய மணவாளதாஸ ரென்னும் நல்லிசைப் புலவர், "கற்றோ ரெனினும் பதினா லுலகம்" என்று பதினான்கு உலகைப்பற்றி அஷ்டப் பிரபந்த நூலில் பாடி யிருக்கின்றார். மாணிக்க

வாசகரும், "ஏர்தரு மேழுல கேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்" என்று மேல் ஏழுலகங்களையும், "பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பால்" எனக் கீழ் ஏழுலகங்களையும் பாடி யுள்ளார்.

நிகண்டு நூலார் முதலியோர்களும் வேறு பல உலகங்கள் இருக்கின்றன வென்று நவிலுகின்றனர். இது போலவே ஆங்கிலேயர்களும் வேறு உலகங்கள் இருக்கின்றன வென்றும்; அவற்றில் மரங்களும், கால்வாய்களும், மலைகளும் இருக்கின்றன என்றும்; அவ்வுலகங்களில் உயிர்க் கூட்டங்கள் நடமாடுவதோடு உரையாடும் சத்தங்களும் கேட்கின்றன வென்றும் பூதக் கண்ணாடியைக் கொண்டு அறிந்து சொல்லுகின்றனர்.

அப்படியானால், அவ் வுலகங்களில் வசிப்பவர்கள் நமது கண்ணுக்குப் புலனாவ தில்லையே; அவர்கள் பேசுவதும் கேட்பதில்லையே என்றால் அப்படி யல்ல; ஒவ்வொரு இனமும் அதற் குரிய பாஷையுந் தொழிலும், ஒவ்வொரு வட்டத்தி லடங்கும். அங்கங்கு நடக்குந் தொழில் அவ்வவ் வட்டத்தி லுள்ளவர்களுக்கே புலப்படும். ஒரு வட்டத்தில் நடக்கும் தொழில்; பிறிதொரு வட்டத்திற்குப் புலனாகா வென ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள்கூட எழுதியுள்ளார். இப்போது அயல்நாட்டில் என்ன நடக்கிறதென்று நாம் கூற முடியுமா? முடியாது. ஆடு, மாடு முதலிய ஜீவர்களும் தம் தம் இனத்துக்குள் பேசுகின்றன. ஆனால், அவைகள் என்ன பேசுகின்றனவோ நமக்குத் தெரிவதில்லை. ஞானிகள் மட்டும் அறிகிறார்கள். ஆகையால் அவைகள் பேசுவதில்லை யென்றால் சரி யாகுமா? ஆகாது. நமக்குத் தெரியாத விஷயங்கள் உலகில் கோடி கோடியாக இருக்கின்றன. ஆகையால் அவைகள் இல்லை யென்று சாதிப்பது கூடாது. ஆகவே இவ் வுதாரணங்களால் நாம் வசிக்கும் இவ்வுலகம் போலவே வேறு பல உலகங்கள் இருக்கின்றன வென்பதை அறிக!

உருவ வணக்கம்

வேறு வேறு உலகங்கள்

பாருங்கள், நாம் வாழும் இவ்வுலகம் ஏற்பட்டு எத்தனையோ கோடி ஆண்டுகளாயும், இன்று வரையில் இது சிறிதும் நிலை பிறழாது சுழன்றுகொண் டிருக்கிறதே. இது போலவே ஏனைய உலகங்களும் சுற்றுகின்றன. இயற்கைச் செயல்களும், படைப்புகளும் மாறியதில்லையே! எண்பத்து நான்கு லக்ஷ யோனி பேதங்களும் ஒன்றை யொன்று ஒத்தில்லாமல், பேதமாய் படைக்கப்பட் டிருக்கின்றன வன்றோ! ஒருவன் இஞ்ஞால மெல்லாம் திரிந்து பார்த்தாலும், ஒரே விதமாய்ப் படைக்கப்பட்ட இரண்டு உருவைக் காண முடியுமோ! சில சந்தர்ப்பங்களில் அவசரமாய்ப் பார்த்த இருவர், ஒத்த வடிவினராயும், பின் அவர்களையே நன்கு கூர்ந்து பார்த்தபோது அங்கங்கள் பேதமாய் அமைந்து வேறு வேறு வடிவினராயும் உளர் என்பதை அறிந்திருக்கிறோம். இதுபோல் செய்கையும், குணங்களும் வேறு வேறாகவே யிருக்கின்றன.

படைப்பின் திறம்

தாவரங்களில் நிழல் தரும் மரங்களுக்குச் சிறிய காய்களும், நிழல் தராத செடி, கொடிகளுக்குப் பெரிய காய்களும் உண்டாக்கி யிருப்பது எவ்வளவு ஆச்சரியம்! நிழல் தரும் மரத்தின் கீழ்ப் பிராணிகள் மனிதர்கள் இருந்து அலுப்பாறினால், அப்போது அம்மரத்துக் கேற்றவாறு பெரிய காய்களைக் கடவுள் படைத்திருந்தால், பழுத்தோ காற்றால் ஆடியோ மரத்திலுள்ள காய்கள் கீழே உட்கார்ந்திருக்கும் ஜீவன் மேல் விழுந்தால், அச்சீவன் உடனே மடிய வேண்டியது தானே. இப்படி யெல்லாம் நோவண்ணமே உலகில் கடவுள் ஒவ்வொரு பொருளையும், அவ்வளவு எச்சரிக்கையுடன் படைத்திருக்கின்றார். இவ்வளவு திறமையும் சிருஷ்டியில் காணப்படுவது கடவுளின் பேரறிவாலன்றோ! இதுபற்றியே ஆன்றோர் கடவுள் பேராற்றல் உடையவர் என்றனர்.

கடவுள் எங்கும் உள்ளவர்

இப்பேர்ப்பட்ட பேராற்றலும் பெருங் கருணையுங் கொண்டுள்ள கடவுள் அங்கு இங்கு என்றில்லாமல் எங் கும் நிறைந்திருக்கின்றார்.

"காலினில் ஊறும் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரசமும்
பூவினுள் மணமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்கும் கலந்துநின் றானே."

என்று திருமூலர் கூறினர். அப்பர் சுவாமிகளும் "விறகிற் றீயினன் பாலிற் படு நெய்போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என் றருளி யிருக்கின்றார். கரும் பில் கட்டியும், பாலில் வெண்ணெயும், பூவில் கந்தமும், விரகிற் றீயும், எள்ளினுள் எண்ணெயும் போல், எம் இறை வன் உலகில் கலந்திருக்கிறார். கடல் நீரில் உப்பு எப் படி கலந்திருக்கின்றதோ அப்படியே உலகில் கடவுள் கலந் திருக்கிறார்.

இனிக் கரும்பில் சர்க்கரை ஆக்கவும், எள்ளில் எண் ணெய் எடுக்கவும், பாலில் நெய் எடுத்தற்கும், பழத்துள் ரசம் பிழிதற்கும், நீரில் உப்பு எடுத்தற்கும் பேச்சளவிலே இயலுமோ! இயலாது. அப் பொருள்களை எடுப்பதற்கு எவ்வளவோ உழைப்பும் முயற்சியும் வேண்டும். அப்போது மட்டுமே அப்பொருள்களி னின்றும் குறித்த பயனை அடையலாம். அது போலவே இவ்வுலகில் இரண்டறக் கலந்து விளங்குகிற கடவுளைக் காணவேண்டு மாயின் சுளு வல்ல. எவ்வளவோ நல்வினைகளைச் செய்து அவாது பாத கமலங்களைக் காண்பித் தருளும்படி மெய்யன்புடன் அவ ரிடம் பக்திகொண் டொழுக வேண்டும். அப்போது மட் டுமே அவர் தென்படுவார். அநுக்கிரகஞ் செய் தருளுவார்.

கடவுள் சோதி வடி வானவர்

இப்படி எங்கும் நிறைந்து எல்லாம் செய்ய வல்ல தெய் வத்தின் இயற்கை வடிவத்தைச் சோதி என்று பக்தர்கள்

தமிழ்நாடு
210363

சொல்லுகிறார்கள். பேயாழ்வார், "பொன்னொளி கண்டேன்" என்றார். மாணிக்கவாசகர், "செந்தழல்போல் திருமேனி" என்றார். இராமலிங்க சுவாமிகளும், "அருட் பெருஞ் சோதி" என்றார். அப்பர், "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" என்றார். பாம்பாட்டிச் சித்தரும், "சோதி மயமான பரிசுத்த வஸ்துவை" எனப் பாடியிருக்கின்றார். இன்னும் பல உதாரணங்களிருக்கின்றன. ஆராய்ந் தறிந்து கொள்க!

பக்தர்களுக்கு எளியனும், மற்றவர்களுக்கு அரியனும் உள்ள கடவுளைக் கண்டவர்கள் பக்தர்களே யாதலால், அவர்களே தெய்வத்தின் திருவடிவை உள்ளபடி கூற வல்லவர். இதனால் கடவுளின் இயற்கை வடிவம் சுத்தச் சோதி வடிவம் என்பது பெறப்படுகின்றது. இங்ஙனம் சோதி மயமான சுத்த வஸ்துவை எவர் மெய்யன்புடன் வழிபடுகின்றனரோ; அவருக்குக் கடவுள் அரு ளுருவங் கொண்டு ஆதரிக்கின்றார். என்ன அரூபியா யிருக்குங் கடவுள் அரு ளுருவம் பெறுவரோ எனின், தடை யின்றிப் பெறுவார். பக்தர்களுக்கு ஞானம் போதிக்கவும், அவர்கள் துன்பங்களைப் போக்கவும் அரு ளுருவம் பெறுகின்றார். மாணிக்க வாசகருக்கு ஞானம் போதிக்கக் குருந்த மரத்தின் கீழ்த் தென்பட்டார். துருவனுக்குத் தென்பட்டார். பிரகலாதனுக்குத் தென்பட்டார். திருமங்கையாழ்வாருக்குத் தென்பட்டார். அவர்கள் இப்படியெல்லாம் தரிசித்த அரு ளுருவங்களைத் தான் பின்னடியார்கள் வழிபட் டுய்ய எழுதி வைத்தார்கள். உருவங்களாக அமைத்து வைத்தார்கள். அதை நாம் இப்போது வணங்குவதே வடமொழியில் விக்கிரக ஹாராதனை எனப்படும். தமிழில் உருவ வணக்கம் எனப் படும்.

உலகமெங்கும் உருவ வணக்கமே.

பூர்வ காலந் தொட்டே உலக மெங்கும் பொறிவணக்கம் நடைபெறுகின்றது. அது மிக உயர்ந்த தென்றும், எளிதில்

முத்தி நிலைக்கு ஏற முதற் படி என்றுங் கருதியே உலகத்தி லுள்ள எல்லா சமயத்தாரும் கோவில்கள் கட்டி, விக்கிர கங்களை அமைத்து வணங்கி வருகின்றனர். மெய்யறிவு பெற்று மேலோராய் விளங்கின ஆழ்வார்கள், நாயன்மார் கள் முதலிய எல்லோரும் உருவ வணக்கமே செய்து வந்த னர். இராமர் கூட லிங்கபூசை செய்து வந்ததாக ராமா யணங் கூறுகிறது. இதுவன்றி

அவதார புருஷர்.

மண்ணுலகிற் பிறந்து அஞ்ஞானிகளாய் அவதிப்படு வோரைத் திருத்தி அவர்களுக்கு மெய்ஞ்ஞானம் போதித்து மேனிலைக்குக் கொண்டு வந்த சமயாச் சாரியர்களை உலகத் தார் அவதார புருஷராகக் கருதுகின்றனர். அன்னோர் பிறந்த நாட்டைப் புண்ணிய நாடாகக் கருதுகின்றனர். அவர்களுக்கு ஆலயங்கள் கட்டி அவற்றில் அவர்களின் சிலைகளை வைத்து வணங்குகின்றனர். இதுவும் உருவ வணக்கந்தான். இதோடு; உலகத்திலுள்ள எல்லாச் சமயத்தாரும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள புண்ணிய ஸ்தலங்களுக்குத் தங்கள் ஆயுள் காலத்துக்குள் ஒரு முறையாவது சென்று தரிசித்து வா வேண்டுமென்ற சமயக் கட்டளை இருத்தலால், அங்கு சென்றதும் அவர்கள் மூர்த்திகளைத் தரிசித்தலால் அதுவும் உருவ வணக்கந்தான் என்பதை அறிய வேண்டும்.

உலகில் எல்லா சமயங்களும் உருவ வணக்கம் செய்கின்றன.

பாருங்கள், நாம் நமது ஆலயங்களில் மூர்த்திகளைப் பிர திஷ்டை செய்திருப்பது போலவே கிறிஸ்தவர் மாதா கோவில்களில் தேவதூதர் சிலைகளையும், சிலுவைகளையும் வைத்திருக்கிறார்கள். அங்கு சென்றதும் அவைகளை அன் புடன் தொட்டு முத்த மிடுகின்றனர். முகம்மதியர்களும், மசூதிகளில் கடவுளின் பீடத்தை அழகிய பச்சைத் துணி யால் அலங்கரித்தும், பஞ்சாவையும் வைத்திருக்கின்றனர். மசூதிக்குப் போனதும் எல்லாரும் அலங்கரித்திருக்கும் திக்கு நோக்கியே வணங்குகின்றனர். இதெல்லாம் உருவ

வணக்க மல்லாமல் வேறென்ன ? இதனை யெல்லாம் உற்று நோக்காத சில கிறிஸ்தவர், முகம்மதியர்கள் இந்துக்கள் கல்லையும், கட்டையையும் கும்பிடுகிறார்கள் என்று கேலி யுரை ஆடுகின்றனர். அதற்கு நாம் வெகுளாமல் நீங்களும் எங்களைப் போலவே உருவ வணக்கம் செய்கிறீர்கள் என்று மேலே கண்டபடி எடுத்து அவர்களுக்கு விளங்கச் சொல்ல வேண்டும்.

ஆலயங்கள் உருவ வணக்கமே

எப்போது கருணை நிதியாகிய கடவுளைத் தொழுதற்கு ஆலயங்கள் ஏற்பட்டனவோ அப்போதே அது உருவ வணக்கந்தான். இங்ஙனம் ஞாலமெல்லாம் உருவ வணக்கம் செய்து வருவதை நாம் நேரில் பார்த்துக்கொண்டே நம்மில் சிலர் உருவ வணக்கம் கூடாதென்றும் அது கண்டிக்கதற் குரிய தென்றும் கூறுதல் பிழை யாகும்.

தொல்காப்பியம்

தொல்காப்பியம் மனிதர்களின் அமைப்பு, செய்கை, குணம், உணவு, தொழில் முதலியவைகளைக் கூறும் முதல் நூலா யிருக்கிறது. அதுவே பண்டைக்கால மனிதர்கள் பொறி வணக்கம் செய்தார்கள் என்று கூறும்போது உருவ வணக்கத்துக்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும் கூறுங் கள்.

யோகிகளும் உருவ வணக்கம் செய்கின்றனர்.

இனி யோகிகளைப் பற்றியும் கொஞ்சம் ஆராய்வோம். யோகிகள் ஆலயங்களுக்குப் போகாமல் திறந்த வெளியில் நின்று ஆகாயத்தை நோக்கி வழிபட்டாலும், மேலே கண் ணுக்கும் மனத்துக்கும் தோன்றுவது நீல வான மன்றோ ? நீல வானத்தைக் கடவுளே உண்டாக்கினு ராதலாலும், அதி லும் கடவுளே கலந்திருக்கின்று ராதலாலும், அது பற்றியே கடவுளுக்கு நீல நிறம் உண்டென்று அறிகிறோ மாதலாலும் அதுவும் உருவ வணக்கந்தான். கண்ணை மூடிக்கொண்டு யோகஞ் செய்வோரும், தங்கள் இருதயத்தில்

கடவுள் சோதி மயமாய் ஒளிர்கின்ருரென்று மனத்தை ஒரு முகப்படுத்தித் தியானித்து இருதயத்தில் அரனெளியைக் கண்டு ஆனந்திக்கின்றனர். யோகிகள் தெய்வத்தின் வடிவைப் புறக்கண்ணுல் பார்க்காவிட்டாலும், அகக்கண்ணுல் கடவுளின் உருவை அமைத்துப் பார்க்கின்றனர் அல்லவோ! மனமானது ஒரு பொருளை ஒரு முறைப் பார்த்து விட்டால், பின்னர் அப் பொருளின்றியே அதனை உருவமைத்துப் பார்க்குந் திறனுடையது. இங்ஙனம் யோகிகளும், மற்றவரும் தங்கள் கால முழுதும் தரிசித்த விக்கிரகங்கள், பொருள்கள் எல்லாம் அவரவர் மனத்துள்ளேயே அடங்கிக் கிடக்கின்றன. வேண்டும்போது மனமானது அப்பொருள்களை அமைத்துப் பார்க்கும். ஆகையால் நுணுகிப் பார்க்கப்போனுல் யோகிகளும் உருவ வணக்கந்தான் செய்கின்றனர் என்பதைத் தெரியலாம். சுவாமி விவேகாநந்தர் முதலியோர் எங்கும் ஓடி யலையும் மனத்தை ஒரு பொருளின் மீது செலுத்தி வழிபட்டா லல்லாமல், வேறு விதமாய் முயன்ருல் மனம் சிதறுண்டு போய் விடுமென்றும் கடவுளை வழிபடுதற்கு விக்கிரகமே இல்லாதபோது ஒரு லோட்டாவை எதிரில் வைத்து அதனை விக்கிரமாகப் பாவித்து வணங்கி வரவேண்டுமென்றும் கூறுகிருர்கள்.

ஆன்ருேர் கருத்து

அங்ஙனமாயின், தாயுமானவர் "பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே" என்னுந் தலைப்பில் பாடியதில்; படிம வணக்கம் செய்யேன் எனக் கூறியிருத்தலால் நாம் ஏன் உருவ வணக்கம் செய்ய வேண்டுமெனச் சிலர் கேட்கலாம். அப்படியல்ல. விக்கிரகங்களை வணங்கும்போது பூத்த நல்ல மலர்களைக் கொண்டு வந்து தூவி வணங்க வேண்டும். ஆனுல் கடவுள் மலர்களிலும் கலந்திருப்பதால், அவைகளைக் கொய்து பூசை பண்ணுவதைப் பார்க்கிலும், "பண்ணேன் உனக்குப் பூசை" என்ருர். இதுவே பாட்டின் பொருத்தமான கருத்தாம்.

உருவ வணக்கம்

பட்டினத்தடிகளும், "கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே" என்று பாடி யிருக்கிறார். கடவுள் கல்லிலும் செம்பிலு மட்டு மல்ல எங்கும் நிறைந்திருக்கின்றார் என்பதே அதன் சரியான பொருளாம். சிலர் பாட்டின்படி சென்று பொருள் சொல்லாமல், தங்கள் நோக்கத்துக்குப் பாட்டை யிழுத்துத் தப்பர்த்தம் செய்து விடுகின்றனர். இப்படிச் செய்வது தலைக்குத் தொப்பியா யிருக்கத் தொப்பிக்குத் தலை என்பது போலாம்.

உருவ வணக்கத்தைக் கண்டித்தோர் கருத்து

தயாநந்த சரஸ்வதி, சிவவாக்கியர் முதலியோர் விக்கிரக ஆராதனையைக் கண்டித்துக் கூறினார்களே என்றால், அவர்கள் கூறியதற்குக் காரணங்கள் வேறாம். மேலும் அவர்களிருந்த காலத்தில் ஆலயப் பணிக்காக நேமிக்கப்பட்ட பலர், தாங்கள் மட்டுமே கடவுளுக்கு அடுத்த படியில் இருப்பதாகவும் நினைத்துத் தாங்கள் கூறுகிறபடியே மற்றவர் கேட்டு நடக்க வேண்டு மென்றும் இறுமாந்திருந்தனர். அதோடு கோவில் கைங்கரியங்களைச் சரியாய்க் கவனிக்காமலும் அதன் சொத்துக்களைத் தீய வழிகளில் செலவு செய்தும் வந்தார்கள். அப் பேர்ப்பட்டவர்களைத் தலைவராகக் கொண்ட கோவில்களுக்குச் ஜனங்கள் செல்வதால் என்ன நல மெய்துவார்கள் என்பதைக் கருதியே ஆலயங்களையும் விக்கிரக ஆராதனைகளையுங் கண்டித்துக் கூறி யிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் கூறுவதை ஆதாரமாகக்கொண்டு நாம் கல்லிலும் கட்டையிலும் கடவுள் இல்லை என்பது பெருந் தவறாம். தூசியிலும் துரும்பிலும், சொல்லிலும், சத்தத்திலுங் கூட இருக்கிற கடவுள் கல்லிலும் கட்டையிலும் இராமற் போவாரா சிந்தித்துப் பாருங்கள்.

கல்லிலும் கட்டையிலும் கடவுள் இருக்கின்றார்.

கடவுள் கல்லிலும் கட்டையிலும் தடையின்றி யிருக்கின்றார். கண்ணப்பருக்கும், மார்க்கண்டருக்கும் கடவுள் கல்லினின்று வந்தே காட்சி யருளி யிருக்கிறார். பிரகலாத

னுக்குத் தூணிலிருந்து வந்து தரிசனங் கொடுத்திருக்கிறார். தெய்வம் எல்லாப் பொருளிலும் கலந்திருப்பதால், நாம் எதை வேண்டுமானாலும் வணங்கலாம். எதையும் வணங் கலா மென்றால், அங்கும் மிங்கும் கிடக்கிற கற்களையும், கட்டைகளையும் வணங்கலாம் என்பது கருத்தல்ல. எப் பொருளைக் கண்டதும், இது கடவுள் என்ற எண்ணமும் பக்தியும் ஏற்படுகிறதோ; எப்பொருள் முன் நமது மனம் உருகிப் புனித உணர்வு பெறுகின்றதோ; அப்பொருளே வணங்கற் குரியது. மேலும் அப்பொருள் முதன் முதல் அது ஆக்கப்பட்ட சிற்பியால் அது ஆகிற வரையில் இது கடவுள் உரு என்ற எண்ணம் ஏறப் பட்டாதாயு மிருக்கும். அதுவன்றிப் பல ஆன்றோர்கள் தரிசித்து அது ஒரு வித ஆக்ருஷ்ண சக்தி ஏறப் பெற்றதாயு மிருக்கும். ஆகையால், அப்பேர்ப்பட்ட பொருளையே நாம் விக்கிரகமாகக்கொண்டு வணங்க வேண்டும். வணங்குகையில் நம்பிக்கையும் அன்புங் கொண்டு வணங்க வேண்டும். அப்போது மட்டுமே கடவுள் அநுக்கிரகம் புரிவார். கடவுள் பக்தி வலையிற் படுபவர். நினைத்த விடத்திலும் நினைத்த போதும் பக்தர்களுக்கு வேண்டியதைச் செய்பவர். உ.தாரணமாகத் திருவாதவூரடி களுக்குப் பரிகொண்டு வந்தார், மண் சுமந்தார், நந்தனு ருக்கு வயலில் தம் பூதகணங்களுடன் வேலை செய்தார். ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆயர்களுக்காகக் கோவர்த்தன கிரி யைக் கொடையாகப் பிடித்தார். இதனால்தான் இராம லிங்க சுவாமிகள், "எண்ணிய நான் எண்ணியவா றெனக் கருளுந் தெய்வம்" என்றார்.

உருவ வணக்கம் எது வரையில் செய்யலாம்.

இனி உருவ வணக்கம் எது வரையில் செய்யலாம் என் றும், எங்கிருந்து செய்யக் கூடாதென் றும் சிலர் கேட்கலா மாதலால், அதற்கும் சிறிது கூறுவோம். விக்கிரக ஹாரா தனையை நிறுத்தி அரூப வழிபாடு எப்போது செய்வோ மென நினைத்தல் கூடாது. கப்பல் ஓட்டித் தன் கப்பலை

வேகமாக நடத்திக்கொண்டு போனால், கப்பல் தானே கரை யடையு மென்றுக் கருதுவதுபோல உருவ வணக்கத்தையே நாம் செய்துகொண்டு வரவேண்டும். பின்னர் அரூப வணக்கம் தானே ஏற்படும். எப்படி யெனில்,

சமாதிநிலையும் உருவ வணக்கமும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் புருஷார்த்தங்க ளாகும். இவற்றில் முதல் மூன்றும் உருவ வணக்கம் பற்றியதே யாம். அம் மூன்றும் கை வந்த பின்னரே ஞானம் எய்தப்படும், ஞான நிலையும் கை வந்துவிட்டால், அப்போது மட்டுமே உருவ வணக்கம் குறைந்து போகும். எவ்வாறெனில் பூரண ஞானம் சித்தி பெற்றவர்கள் நினைத்தபோது சமாதி நிலையி லிருந்து விடுகின்றனர். சமாதி நிலையானது உலகம் வேறு தான் வேறு என்றில்லாமல் எல்லாந் தானும் தானே கடவுளாயும் பொருள்களின் வாசனையே யின்றிக் கிடப்பது. இங்கு தான் உருவ வணக்கம் அற்றவர்களாக ஆகலாம். ஆனால், அடிக்கடி சமாதி நிலையில் இருந்த ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்ஸதேவர், நினைவிலிருக்கும் போதெல்லாம் கூட உருவ வணக்கமே செய்து வந்திருக்கின்றார். இப்பேர்ப்பட்ட பரம ஞானி சமாதி நிலை கை வந்தவரே பொறி வணக்கம் செய்துவந்த போது சாதாரணராகிய நாம் அதனைப் புறக்கணிக்கலாகுமோ கூறுங்கள்.

ஆலயந்தொழுவது சாலவும் நன்று.

கருணாநிதி யாகிய கடவுளைத் தொழுதற்கு மற்ற இடங்களைப் பார்க்கிலும் ஆலயங்களே சிறந்த இடம். சிலர் கோவிலில் தானா கடவுள் இருக்கிறா ரென்றும், எங்கும் கடவுள் இருக்கிறா ரென்றும், நெஞ்சத்துள் இருக்கிறா ரென்றும், ஆகையால் கோவிலில் போய்த் தொழுவதை விட நாம் நினைத்த இடத்திலிருந்தே கும்பிடலா மென்றும் பேசுகின்றனர். நாளெல்லாம் உலக விஷயங்களில் முயன்று கொண்டிருக்கிற மனிதர்களுக்கு மன அமைதியுடன்

நினைத்த இடத்தி லிருந்து கொண்டு கடவுளை வணங்கு தற்கு நேரமேது? மனோசக்தி ஏது? இதெல்லாம் உற்று நோக்கியே ஆன்றோர் கடவுளை நினைத்தற் கென்று ஒரு இட மிருந்தால் அங்கு சென்றதும் இதர எண்ணங்களை ஒழித்து அவ்விடத்தைவிட்டு நீங்கு மளவாவது ஆண்டவ னது சிந்தனையா யிருப்பர் என்றே ஆலயங்கள் கட்டி வைத் தனர்.

நினைத்த இடத்தி லிருந்து தொழும் மனோ சக்தி வாய்ந்த சந்நியாசிகளே ஆலயங்கள் தோறும் சென்று வணங்கி வந்தார்கள். சிலர் உலக விஷயங்கள் நடைபெறும் பட்டணங்களை விட்டு அடவிக்குச்சென்று கடவுளை வழிபட் டிருக்கிறார்கள். மேலும் ஆலயங்களுக்குச் செல்லுவதால் ஓர் மையும், சகோதரப் பான்மையும், சமத்துவமும் ஏற்படு கின்றன. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று கூறுவோர் களும், நாளடைவில் கடவுள் முன் எல்லாரும் சமம் என்றும் எல்லாப் பிராணிகளிடமும் சமமாய் நடந்துகொள்ளவேண்டு மென்றும் அறிவார்கள். கிறிஸ்தவர் முகம்மதியர்கள் காலந் தோறும் கோவிலுக்குச் சென்று வணங்கிவருவதனால், ஓர் மையும் சகோதரப் பான்மையும் கட்டுப்பாடும் உடையவர்க ளாக இருக்கிறார்கள் என்பதை நேரில் பார்க்கிறோம்.

இப்படியெல்லாம் ஆலயஞ் சென்று வழிபடுவதால் எவ்வளவோ நல மெய்துவோம் என்பதை ஆராய்ந்து பாராத சிலர் கோவிலில் தானா கடவுள் இருக்கிறார், அங்கு தானா சென்று வணங்க வேண்டும் என்று வெற்றுரை விளம்புகின்றனர். இப்படிக் கூறுவோர், அவரும் நினைத்த இடத்திலிருந்து கும்பிடும் மன ஆற்றல் இல்லாதவராயும், ஆலயங்களுக்குச் சென்று கும்பிடாதவராயும், கெடுவதோடு, அவர் வார்த்தையைக் கேட்போரும் கெடுவர். கெடுவ தோடு கடவுளின் அநுக்கிரகமும் பெறாது ஒழிவர். ஆத லால், அன்பர்கள் அப்பேர்ப்பட்டவர்கள் வார்த்தையைக்

கேட்காது ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு உய்வார்களாக!

பேரின்பம்

நாம் இத்துணைச் சிரமப்பட்டு கடவுளை வணங்குவதால் எய்தும் நலமென்னவெனின் அவரது பாதகமலம் பெற்றுப் பேரின்ப மடைதலே. உலகில் பேரின்பம் சிற்றின்பம் என இரு வகைப் படும். அவற்றுள் மண் பொன் பெண் முதலிய வைகளால் நுகரப்படும் இன்பங்கள் சிற்றின்ப மெனப்படும். சிற்றின்பம் நீரிற் குமிழி போன்றும், மண்ணின் கலம் போலும் நிலையின்றி அழிவன வாதலின், இதனை மெய்யறிவு பெற்ற மேலோர் விரும்பார். பேரின்பமோ என்றும் அழியாத இன்ப மாதலின் அதனை அறிஞர் விரும்புவார். ஞாலத்தில் உண்டாகிய ஆன்மாக்கள் அனைத்தும் ஈற்றில் பேரின்பத்தில் கலப்பதே அவற்றின் முடிபாம். கலக்கிற வரையில் பிறவி வட்டத்தில் சுழல வேண்டியதே! கலந்த பின் சாதல் பிறத்தல் அற்றுவிடுகின்றன. இதைத்தான் பரகதி என்றும் முத்தி என்றும் கூறப்படும். ஆகவே மனிதப் பிறவி கன்மத்துக் கீடாக ஏற்பட்ட தாயினும் வினையையொழித்து இறைவனிடம் பக்தி பூண்டு இறுதியில் பேரின்ப மடைதலே கடமையாம்.

அகில ஆசை அனுபவிப்பதால் அடங்கி விடுமா ?

வண்ணை நகர் ஸ்ரீமான் ஸ்ரீ. க. வைத்தியலிங்க பிள்ளை அவர்கள் எழுதியது.

மாநில ஆசைகளாகிய மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, என்னும் மூவாசைகளினால் முற்றத் துறந்த முனிவர்களுந் தாக்குண்டு அலக்கணுற்ருரெனின், பஞ்சப் புலவேடர் வயப்பட்டுப் பற்றுக் கோடின்றிப் பரிதவித் துழலும் நம்

போலியர் அவைகளைக் கடக்குந் தரமன்று. தற்காலத்துள்ள நவீன விவேகிகளுட் சிலர் ஐம்புலன்களாலும் நுகரப்படும் லௌகீக இன்பங்களை ஆசை அடக்குந் துணையும் அனுபவித்தாலன்றி அவை அடங்க மாட்டாவென ஆக்ஷேபந் தொகுப்பார்; இவ் விதண்டா வாதம் எம்மட்டில் உண்மையென்பதைச் சற்றே பரியாலோசிப்பாம். மண்ணாசையை நோக்கினுலோ, "தனக்கொருவரு மிணையின்றித் தவள சத்திர நீழலில் தனியாழி யுருட்டுஞ் சக்ரவர்த்தியும், சாகரத்தையுந் தூர்த்து அதில் தன்னாணை நடாத்த உள்ளுவன்" என்றூர் தாயுமானவர் என்னும் பெருந்தகையார். அங்ஙனமாயின் மற்றைய சாமானியர்களுக்கு மண்ணாசை நீங்கி விடுமென்பது யாங்ஙனம்? இனிப் பொன்னாசையைப் பற்றிப் புகலப் புகினே, அளகையாளியும் நாண அட்ட ஐஸ்வரியங்களையும் படைத்துளோரும், அம்மட்டில் உபாதியடையாது பின்னரும் பணப்பிராந்தி கொண்டு இரசவாதஞ் செய்து பொருளீட்டற் கலைந்து இடர்ப்படுவரென அம்மகானே கூறியருளினர். அத்தகைய குணிப்பற்ற நிதிக்கிழவோரும் இரசவாதஞ் செய்ய அலமந்து திரிவரெனின், கீழ் நிலையிலுள்ள மாந்தரின் பண அவாவைப் பரக்கக் கூறவேண்டியதில்லை. மற்றைய பெண்ணாசையைப் பற்றிப் பேசப் புகினே பெரிய பாரதமாக விரியும்; அங்ஙனம் உலப்பற்ற சரிதைகள் எமது புராணேதிகாசங்களில் மலிந்து கிடக்கின்றன. அவைகளை விடுத்து, தற்காலத்தில் நிகழ்ந்த ஒரு சரித்திரத்தால் விளக்குகின்றேன். அஃது வருமாறு:—

"சோழ வளநாடு சோறுடைத்து" என்று ஔவைப் பிராட்டியாற் சிறப்பித்துக் கூறப்பட்ட சோழதேயத்தின் கண்ணே, 500 வேலி நன்செய் நிலமுடைய பெரிய மிராசுதாராகிய வைதிகப் பிராமணர் ஒருவர் இருந்தார்; அவர் தன் சீவிய காலத்தில் ஒவ்வொரு மனைவியும் இறக்க இறக்க ஒருவர் பின்னொருவராக ஐந்து பெண்களை வதுவை செய்தார். அப்பெண்கள் ஒவ்வொருவருக்கும், நான்கு ஐந்துக்குக் குறையாத பிள்ளைகள் ஆணும் பெண்ணுமாகப் பிறந்தன. அவருக்குத் தொண்ணூறு வயசு நடக்கும்போது ஐந்தாவது மனைவியு மிறந்துவிட்டாள். அக்காலத்தில் அவருக்குப் பிள்ளைகள் பேரப் பிள்ளைகள் பீட்டப் பிள்ளைகள் யாவருஞ் சேர்ந்து முப்பத்தேழு பேர் இருந்தார்கள்.

அகில ஆசை அனுபவிப்பதால் அடங்கி விடுமா?

அவருக்குத் தொண்ணூற்று நான்கு வயது நடக்கும்போது, ஒரு ஞான்று சடுதியாக இருந்தாப்போல கருவிகளனைத்தும் குறைந்து உணர்ச்சியற்று மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விட்டார். அதனைக் கண்ணுற்ற பிள்ளைகள் முதலாயினோர் மிக்க பரிதாபத்தோடு ஓடிவந்து தூக்கிக்கொண்டு போய்ச் சயனத்தில் வளர்த்தி வேண்டிய சைத்தியோபசாரங்கள் புரியவும், மயக்கந் தெளியாமல் சுவாசம் மாத்திரம் தவளைப் பாய்ச்சல்போல விட்டு விட்டு நடந்து கொண்டிருப்பதைக் கண்டு இனிப் பிராணன் நிற்கமாட்டாது, விரைவில் நீங்கி விடுமென்று நிச்சயித்து, அட்டஐஸ்வரியங்களும் பெற்றுத் தொண்ணூற்று நான்கு வயசு வரை பெருவாழ்வுற்றுவைகிய இம்மகானுக்கு எங்கள் வருணச்சிர தருமப்படி, அந்திய காலத்தில் நடத்தவேண்டிய "ஆபத் சந்நியாசம்" என்னுங் கிரியையைச் செய்ய வேண்டுமென்று கருதிப் பீட்டப் பிள்ளைகளில் ஒருவனை மாத்திரம் கிழவனாருக்குப் பக்கத்திலே வைத்து விட்டு, ஏனைய ஆடவ ரனைவரும் பெரிய பந்தரிட்டு அதனை வாழை தோரணம் பூமாலை மாவிலை முதலியவைகளால் அலங்கரித்து முடித்த பின், கிரியைக்கு வேண்டிய சமித்து முதலிய உபகரணங்களைச் சேகரிப்பதற்காகப் பல இடங்களுக்குஞ் சென்று விட்டார்கள். அத்தருணத்தில் கிழவனாருக்கு மூர்ச்சை தெளிந்து கண்ணை விழித்துப் பக்கத்திலிருக்கும் பீட்டப் பிள்ளையை நோக்கி, குழந்தாய்! இன்றைக்கு என்ன விசேஷம்? என் இவ்வளவு ஆடம்பரங்களெல்லாம் நடக்கின்றன? என்று வினவினார். அதனைக் கேட்ட சிறுவன் உங்களுக்கு ஆபத்சந்நியாசக் கிரியை நடத்துதற்காக இவைகளெல்லாம் நிகழ்கின்றன என்றான். பெரியவருக்குக் காது முன்னரே மந்தப்பட்டிருந்தமையான், அவன் ஆபத்சந்நியாசம் என்றது, ஆறுவது விவாகம் என்று கேட்டுத் தம்பி எனக்கு ஆறுவது விவாகமா செய்து வைக்கப் போகிறார்கள்; நானும் சாவதற்கிடையில் ஆறுவது விவாகமுஞ் செய்துபோட வேண்டுமென்று நெடு நாட்களாக நினைத்திருந்தேன்; பீஷ்மாச்சாரி பிதாவாகிய சந்தநு மகாராஜனுக்குச் செய்ததுபோல, எனது பிள்ளைகளும் எனக்குச் செய்யப் போகிறார்களாமோ? அப்படியே செய்து வைக்கட்டும்; மிகுந்த சந்தோஷமென்று கூறினாராம்! அன்பர்களே!

தொண்ணூற்று நான்கு வயசு காறும் உலக இன்பங்களை அனுபவித்த விருத்தருடைய இந்திரிய நிக்கிரகத்தைக் கண்டீர்களா? அம்மம்ம! அறப்பழுத்த கிழவனுரே இங்ஙனமாய மாற்ற மியம்பும்போது, அகில ஆசை அனுபவித்தால் அடங்கி விடும் என்பாரது வார்த்தை அங்கீகரிக்கத்தக்கதா? அக்கினிக்கு விறகை இட இடக் கொழுந்துவிட் டெரியுமே யன்றிச் சிறிதாவது குறையுமா? சமுத்திரத்திலே எத்தனை ஆறுகள் போய் விழுந்தாலும் நிரம்புமா? அதுபோல அகில ஆசை எத்தனைக் காலம் அனுபவிக்கினும், வரவா மேற் கொள்ளுமே யன்றி நீங்க மாட்டாது என்பது தேற்றம். அங்ஙனமாயின் எத்தனையோ மகான்கள் இல்லறத்திலிருந்து துறவடைந் திருக்கிறார்களே யென்று ஒருவர் ஆக்ஷேபந் தொடுக்கின் அவர்கள் நீங்காத கடவுள் தியானத்தினாலும், ஆன்ம விசாரத்தினாலும், பெரியோர் சகவாசத்தினாலும் உலக இன்பங்கள் அனைத்தும் விழி மயக்கெனத் தெளிந்து அவைகளில் உவர்ப்புண்டாகி நிக்கிரகஞ் செய்து துறவடைந்தார்களே யன்றி, அவ்வகில இன்பங்களை அனுபவித்துக் களைத்து விட்டவர்க ளன்று. ஆதலால், அன்பர்களே! தேகத்திலுண்டாகுந் தினவைப்போலச் சடுதியிற் றோன்றி மறையும் அகில இன்பங்களையே சதமென்று கருதி உங்கள் வாணாட்களை வியர்த்தமாக்காது, நீங்குதற்கரிய குடும்பசாகரத்துள்ளே மூழ்கிக்கிடப்பினும், சேற்றிற் கிடந்து புரளும் பிள்ளைப் பூச்சியைப் போலவும், தண்ணீர்க் குடத்தைத் தலையிற் கொண்டு செல்லுந் தாதியைப் போலவும், கமலநீர் போலவும், புளியம்பழமும் ஓடும்போலவும் ஒன்றிலும் பஞ்சப் புலன்களை அழுந்த விடாது, மாயவனறியா மகா தேவனது சரணார விந்தங்களை அல்லும் பகலும் அன்போடு வழுத்தி நித்தியானந்தமாகிய முத்தியின்பத்தைப் பெறக் கடவோமாக.

லக்ஷ்மி முதல் வருடத்து, மூன்றும் வருடத்து, புஸ்தகங்கள், பைண்டு செய்து தயாராக இருக்கின்றன. உடன் ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொன்றும் விலை ரூபா **3**.

லக்ஷ்மி ஆபீஸ்,

சென்னை.

நரி விருத்தக் கதைகள்

(குழப்பலூர் ஸ்ரீமான் மே. சக்கரவர்த்தி எழுதியது.)

(முன் 18-ம் பக்கத் தொடர்ச்சி.)

கதை 3.

அவந்தி நாட்டிலுள்ள உச்சயினிப் பதியிலே இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்னும் மூவகை வணிகருள்ளே தலையாய இப்பர் குடியிற் பிறந்து இராஜ சிரேஷ்டியாயிருந்த சுரதத்தனென்பான் யசோபத்திரை யென்பாளை மணந்து நெடுநாள் புத்திர சந்தான மின்றி யிருந்தனன். அவன் மனைவி இக் குறையினால் மனம் வருந்துகின்ற காலத்தே, அந் நகர்ப்பதி ஜிநாலயத்திலே பிஹிதாச்சிரவ ரென்னும் முனிவர் எழுந்தருளினர். அதனைக் கேட்ட யசோபத்திரை அஷ்டவித அர்ச்சனைப் பொருளுடன் கோயில் சென்று அருகனை அருச்சித்து முனிவரை வணங்கி, 'எம் பெருமானே, எனது இப் பிறவி இங்ஙனமே புத்திர சம்பத்தின்றி ஒழியுமோ' எனக் குறிப்பிக்க, முனிவர், 'நங்கையே உனக்கு நற் புதல்வன் பிறப்பான். அப்பொழுது அப் புதல்வன் தந்தை துறவுமேற் கொண்டு வனம் புகுவான்; புதல்வனும் பருவ மடைந்த பின் தந்தை வழியே செல்வான்' என்றனர்.

யசோபத்திரை புத்திர சம்பத்துக்கு மகிழ்ந்தும், புத்திரனும் கணவனும் துறவு கொள்வதற்கு வருந்தியும் முனிவரை வணங்கி தன் இல்லஞ் சென்றனள். பின்னர் அவள் சில நாட்களுக் கெல்லாம் கருப்ப முற்று நவ மாசஞ் சென்ற பின் ஒரு நற் புத்திரனை ஈன்றாள். மகவின் தந்தை சுரதத்தன் புத்திரோற்பத்தியைக் கேட்டு, 'கதிமதியும் ஒருங்கு பெற்றேன்' என்னும் உவகையனாய்த் துறவுமேற் பூண்டு இல்லி னின்றும் நீங்கினன். யசோபத்திரை புருடன் பிரிவிற்கு மனம் வருந்திப் பின், புத்திர மோகத்தால் தேர்ந்து ஈன்ற மகவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து, அம் மகவுக்குச் சுகுமாரன் என்னும் நாமத்தைச் சூட்டினள்.

சுகுமாரன் சித்திரத்திலும் தபோதனர் வடிவத்தைக் காணா வண்ணம் அவன் தாயார் ஜாக்கிரதை யெடுத்துக்

கொண்டு, உலக போகத்தில் திளைக்க பல ஏற்பாடுகள் செய்து வந்தாள். இங்ஙனஞ் செய்தால் தன் புத்திரன் துறவு மேற்கொள்ளா னென்பதே யசோபத்திரையின் எண்ணம். தனயன் விவாகத்திற் குரிய பருவத்தை யடைதலும், தாயார் அமர மகளிர்க் கொப்பான, ஸ்ரீ ஹரி, திரதி, கீர்த்தி, புத்தி, இலக்குமி என்னும் திரு நாமங்களை யுடைய வைசிய குல கன்னிகா ரத்தினங்கள் முப்பத் திருவரை மணஞ் செய்து வைத்து, அவர்க ளுடைய நந்தவனஞ் சூழ்ந்த முப்பத்திரண்டு வெள்ளி மாடம் எடுப்பித்து, மனை வாழ்க்கையில் மன முறியாவாறு பல போகங்களைத் துய்க்கச் செய்தாள்.

சுகுமாரனோ, சுவர்ண ரத்ந மயமான பூமி அல்லது மண்ணை மிதித் தறியான்; மாணிக்க விளக்கொளி யல்லது மற்றொரு விளக்கொளியைப் பார்த் தறியான்; சந்தன குங்குமச் சாந்தின் சேறல்லது வேறு சேறு பட்டறியான்; கதம்ப கஸ்தூரி காரகில் கலந்த எண்ணெ யல்லது வேறொரு எண்ணெயைத் தடவி யறியான்; இரத்தினா பரண மல்லது இதர ஆபரணம் பூண்டறியான்; புஷ்பகம் பொதிந் தெடுத்து வட்டித்த போனக மல்லது மற்றைய போனகம் புசித் தறியான். இவ்வகையால் சுகுமாரன் அமர சுகத்தினும் விஞ்சிய சுகத்தைப் பெற்று, புதுமணப் பெண்களை போன்று அலங்கரித்து விளங்கும் மனைவியரைக் கூடி இன்பந் துய்த்து வந்தான்.

இது காலத்தே தீபாந்தரத்தி னின்றும் ஒரு வணிகன், குளிர் மிக்க காலத்தே உஷ்ணமாகியும், உஷ்ண மிக்க காலத்தே சீதமாகியும் இன்னும் இவைபோல்வன பல சுகங்களைத் தரும் இரத்தினக் கம்பள மொன்றை உச்சயினி நகர்க்குக் கொண்டுவந்து, இது பெறுவான் மன்னனே யெனத் தேர்ந்து, அந்நகர் மன்னனை யணுகிக் கம்பளத்தைக் காட்டினன். மன்னன் விலை கணிக்கும் வணிகரைக் கொண்டு இதன் விலையை வினவ, அவர்கள், 'இது லக்ஷம் பொன் பெறு' மென்றனர். அரசன், 'அவ்வளவு பொன் நம்மிடம் இன்றெ'னக் கூறலும், தீபாந்தர வணிகன், 'இஃது எவ்விடம் விலைபோகும்; இதனைப் பெறுவார் யாருளரோ' வென்று சிந்தா குலங் கொண்டனன். அப்பொழுது அந்நகர வணிகரிற் சிலர் 'சுகுமாரன் மனையில் விலை போகும்' என்று அவ் வணிகனுக்கு அறிவித்தனர்.

வணிகன் அவர்கள் கூறியவாறே சுகுமாரன் மனை சென்று யசோபத்திரைக்குக் காட்டினன். யசோபத்திரை விலை கணிப்போரைக் கொண்டு அக் கம்பளத்தை விலை மதித்து, லக்ஷம் பொன் கொடுத்து அதனைப் பெற்றுத் தன் குமாரனுக்குக் கொடுத்தனள். குமாரன், இக் கம்பளம் எனக்குப் போதிய தல்ல. இதனை நின் மரு மக்களுக்குக் கொடுப்பா யெனலும், யசோபத்திரை, ஒருவர்க்குக் கொடுப்பின் மற்றொருவர்க்கு வருத்த முண்டாகும் என்று கருதி அக் கம்பளத்தை அறுபத்து நான்கு துண்டுகளாக்கி முப்பத் திருவர் மரு மக்கட்கு மிதி யடியாக உபயோகமாகும்படி செய்தனள்.

மன்னனாலும் விலை கொடுத்துப் பெறுதற்கு முடியாத இவ் வரிய கம்பளத்தை யசோபத்திரை பெற்று, சாதாரண மிதியடிக்கு உபயோகித்ததைக் கண்டிருந்த வணிகரும் பிறரும் அரசனுக்கு அறிவித்தனர். அரசன் ஆச்சரிய முற்று, 'இத் தகைய ஆக்கம் படைத்தோரும் நம் நகரிலுளரோ? அவரை யாம் காண்போம்' என்று தன்னுழையாளர்க் குரைத்தனன்.

அரசனது உறுதிச் சுற்றத்தார் யசோபத்திரைக்கு அரசன் வருகையை முன் னறிக்கை செய்து, சுகுமாரன் மனைக்கு அரசனை அழைத்துச் சென்றனர். அரசன் அம் மனை யடைதலும் யசோபத்திரை எதிர்கொண்டு அழைத்து உபசரித்துத் தக்க ஆசனம் அளித்தனள். அதன் பின், அரசன், 'நின் செல்வக் குமரன் எங்குளான்? அவனைக் காண வேண்டும்' எனலும், யசோபத்திரை மேன்மாடி சென்று குமாரனை அண்மி, 'செல்வ! நம் சுவாமி வந்திருக்கின்றார். அவரைக் கண்டு பணிவாய்' என்று கூறி அவனை அழைத்து வந்து அரசனிடம் சேர்த்தனள். சுகுமாரன் அரசனைப் பணியவும், அரசன் கட்டித் தழுவி அருகாசனத் திருத்திப் பாராட்டினன்.

பின்பு, யசோபத்திரை மங்கலப் பெண்களைக் கொண்டு, சித்தார்த்த மென்னும் வெண் சிறு கடுகால் சேஷை யிடுவித்து, அரசனை நோக்கி, 'அரசே! நின் தம்பி யகத்து அன்னம் புசிக்க எழுந்தருளல் வேண்டும்' எனலும், அரசன் அதற் கிசைதலும், யசோபத்திரை போனக சாலைக்கு அழைத்துச் சென்று தவி சமைத்துப் பொற்கலம் வைத்து

அறு சுவையுடன் கூடிய அன்னம் வட்டித்தனள். அரசன் சுகுமாரனுடன் அமர்ந்து அன்னம் புசித்த பின் தாம்பூலாதி கொண்டனன். அப்பொழுது அரசன் யசோ பத்திரையை நோக்கி, 'நின் புதல்வன் படைத்த திவ்வி யான்னத்தை உண்ணுது திகட்டுதற்கும், நயனங்களில் நீர் வாருவதற்கும், இட்ட ஆசனத்துப் பொருந்தி உட் காராததற்கும் காரணம் நோயோ' என்றனன். அதற்கு அவள் 'அரசே! என் புத்திரனுக்கு நோயொன்று மில்லை. அவன் இதுகாறும் தண் பொய்கையிற் பூத்த தாமரை மலரில் முன்னை நாள் பொதிந்து வைத்த அரிசியை மறுநா ளெடுத்து வட்டித்த உணவை யன்றி வேறோர் உணவை உண்டிலன்; இன்று தாங்கள் வந்தமையால் அவ் வரிசியோடு சாதாரண அரிசியைக் கொஞ்சம் கலந்து வட்டித்ததன் காரணமாக அவன் அவ் வன்னத்தை உமிழ்ந்துண்டான்; மங்கலப் பெண்கள் எம்பெருமானுக்குச் சேஷை யிட்ட வெண் சிறு கடுகு ஊன்றவும் அவன் ஆசனத்துப் பொருந்தி யிலன். அன்றியும், அவன் மாணிக்க தீபத்தை யன்றி மற் றோர் தீபத்தைப் பார்த்தில னுதலாலே, தங்கள் பொருட் டுத் தைல மிட்டு எற்றிய விளக்கின் புகை அவன் கண்களில் நீர் வாரச் செய்தன? என்றாள். அரசன் அதைக் கேட்டு 'சுகுமார னென்னும் நாமம் இவனுக்கே தகும்' என்று புகழ்ந் துரைத்தான். அங்ஙனம் உரைத்த அரசனுக்கு யசோபத்திரை பொற்றட்டில் அநேக வித இரத்தினங்களைக் கொட்டி காணிக்கையாக வைத்தனள். அரசன் அவை களைப் பெற்று சுகுமாரனுக்கே ஈந்து அரண்மனை யடைந்த னன்.

அரசனாலும் புகழப் பெற்ற பெரும் பாக்கியமும் மிகு போகமும் பெற்ற சுகுமாரனுக்குத் துறவு மேற்கொள்ளும் காலம் வந்து கூடியது. அது பொழுது சுகுமாரனுடைய நன் மாமனரா யிருந்து தீக்ஷை பெற்றுத் தபோ மகிமை யால் சாரணத்துவமும் முக்கால வுணர்ச்சியு மடைந்த முனிவர், சுகுமாரன் மனைக்கு அருகே நந்தவனத்தின் மத்தியில் அமைத்த ஜிநாலயத்தில் எழுந்தருளி, உத்தம யோகந் தாங்கி இடையாமம் போயின பின், 'திரிலோக பிரஞப்தி' என்னும் திவ்வியாகமத்தி லுள்ள திருமொழிகளை ஓதுவா ராயினர். அம் மொழியில் நாகலோக ஸ்திதியும்,

மக்க ளுலக ஸ்திதியும், தேவலோக ஸ்திதியும் விரிவாக இருந்தன. இவற்றில் தேவலோக ஸ்திதியிலே பத்மகுல்ய மென்னும் விமானத்தைப் பற்றி வரும்பொழுது, மேன்மாடியில் சாளரத்தின் அருகு சயனித்திருந்த சுகுமாரன் செவிகள் கூர்ந்து கேட்டன. அம்மொழி செவியிற் புகுந்ததும் சுகுமாரனுக்குப் பூர்வ பிறப்பின் நினைவு வந்து கூடியது. அவ்வளவிலே சுகுமாரன் இக போகத்தைத் துறந்து வெளிப்பட வேண்டுமென்ற எண்ண முடையவனாய் மாடத்தினின் றிழிய முயற்சித்தனன். பல வழிகளிலும் வாயில் காவலர் காத்து வருவதால், அவர்களால் தடைப்படின் ஆத்மகாரியம் சிதை வுறுமென் றெண்ணி, மாடத்திலிருந்த பெட்டகத்தைத் திறந்து பல பட்டாடைகளை ஒன்றோடொன்று தொடுத்து, மாடத்தின் கொடி மரத்திலேடே ஆர்த்து நான்றும்படி விட்டுப் பின்பு அவ் வாடையின் வழியே இழிந்து நந்தவனத்தி லுள்ள ஜிநாலயத்தை யடைந்து முனிவரை வணங்கி, ‘பெரியோய், எனக்குத் தீக்ஷா பிரசாதம் தந்தருள் வேண்டும்’ என்று பிரார்த்திக்க, முனிவர் அவனது பக்குவ தசையை யோர்ந்து அவனுக்குத் தீக்ஷையும் பல அரிய விரதங்களையும் தந்தருளினர்.

அவன் அவைகளைக் கைக்கொண்டு வனப் பிர தேசத்தைச் சார்ந்த மயான மொன்றிற் றங்கித் தியானரூடனா யிருக்கும் பொழுது, சுகுமாரனின் முற்பிறப்பில் அவனது மைத்துனி அவனை முனிய அவன் கோபங்கொண்டு அவளைத் தன் காலா லுதைக்க, அவள் சினந்து, ‘உதைத்த நின்பாதங்களை மறு பிறப்பில் நரியாய்ப் பிறந்தாவது தின்பேன்’ என்று வஞ்சினங் கூறியவளாய் மாணமுற்று நரியாய்ப் பிறந்து குட்டியுடன் அம் மயானங் குறுகி, தியான பரவசனா யிருக்கும் சுகுமார முனிவன் பாதங்களிரண்டையும் பூர்வ வன்ம கன்மோதயத்தால் கடித்துத் தின்னத் தொடங்கினள்.

சுகுமார முனிவரனோ கலங்காத சிந்தையனாய், ‘இத் தேகம் பூர்வ கர்மத் தொடர்பால் வந்த தாதலின் இதன் சிதைவுக்கு வருந்துதல் எற்றிற்கு’ என்று கொண்டு மேலும் மேலும் சுக்கிலத் தியானரூடனா யிருந்தனன். அந் நரிகளோ இரண்டு நாட்களாய்ப் பாதம் தொடங்கி

முறையே அவயவங்களைப் பக்ஷித்துக் குடலையும் பக்ஷிக்கப் புகுந்த பின், உபத்திரவங்களைச் சகித்துக் கலையாத தியான னாய் நின்ற சுகுமார முனிவன் தேக வியோகமாகி சர்வார்த்த சித்தியை யடைந்தனன்.

இங்ஙனம் சுகுமாரன் நற்கதி பெற்றதை யறியாத யசோபத்திரையும் அவளது மருமக்களும் சுகுமாரன் எங் குற்றனனோ வென்று பல விடமுந் தேடிக் கடைசியில் மயா னத்தில் தவ மியற்றிப் பூதவுடல் நீங்கிப் புண்ணியம் பெற்ற மையை யறிந்து, தாங்களும் அவ்வழி செல்லுதலே நெறி யெனக் கொண்டு எல்லாப் பொருள்களையும் தானஞ் செய்து தவமேற் பூண்டு சமாதி மரணத்தால் உடல் நீத்து உயர்ந்த தேவ கதியைப் பெற்றார்கள்.

இதனால் பெறுவது என்னையெனின்:—

இளமையும் வனப்பும் நில்லா
இன்பமும் நின்ற வல்ல
வளமையும் வலிது நில்லா
வாழ்வுநாள் நின்ற வல்ல
களமகள் நேசம் நில்லா
கைப்பொருள் கள்வர் கொள்வார்
அளவிலா அறத்தின் மிக்க
தியாதுமற் றில்லை யன்றே.

கதை 4.

புண்ணியஞ் செய்ய வேண்டு மென்ற நல்லெண்ண முடைய சிராவக னொருவன், ஜிநாலய மொன்று கட்டி ஜிந பிம்பப் பிரதிஷ்டை செய்து, அதற்கு நித்திய நைவேத் திய பூஜா காரியங்கட்கு யாதொரு ஏற்பாடுஞ் செய்யாது மரண மடைந்து, செய்த புண்ணியத்தின் ஈடாகக் கிடைத்த தேவ கதியைப் பெற்றனன். பெற்ற அவன், அவதி ஞானத் தாலே பூர்வ பவ உணர்ச்சி பெற்று, தான் பூர்வ ஜன்மத் தில் சமைத்த ஜிநாலயத்திற்குத் தினசரி பூஜை செய்யப் படித்தாம் ஏற்படுத்தாது பிழை செய்துவிட்டதற்கு வருந்தி, அதனை நிவர்த்திப்பான் வேண்டி, பொன் மயில் வடி வெடுத்து ஆலயத்தை யடைந்து கோயில் அர்ச்சகனை நெருங்கித் தினந் தினம் பூஜா காரியங்கள் நிறை வேறத் தகுதியாக இரண்டு பொன் னிறகுகளைப் போட்டு வந்தது.

அவைகளை அர்ச்சகன் எடுத்துப் பூஜாகாரியங்களை நிறைவேற்றித் தன் குடும்பத்தையும் போஷித்து வந்தனன். அர்ச்சகன் தினந்தினம் மயிலினிடம் பெறுவது அன்றைய நாட்பொழுதே கழிக்க முடிவதா யிருந்தமையால், அவன் பேராசையனுய், இதனைப் பிடித்து விற்றுப் பெரும் பாக்கியம் அடையலாமெனக் கொண்டு மயிலை நெருங்கித் தழுவினன். அது அவனையுஞ் சேர்த்து ஆகாயத்திற் கிளம்பி காக்கையாய் மாறிப் பறந்துபோக, பேராசை வயப்பட்ட அர்ச்சகன் தலைகீழாய்ப் பூமியில் விழுந்து இறந்துபோனுன்.

இதனுல் நாம் அறிவது, பேராசை யென்னும் பேய் வாய்ப் படலாகா தென்பதே.

(தொடரும்.)

மதங்களும் மாமிஸ போஜனமும்

(ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி அவர்கள் எழுதியது.)

((109-ம் பக்கத் தொடர்ச்சி)

சைவமும் மாமிஸ உணவும்

சிவ மதம் அல்லது சைவ மதம் என்ற உயர்ந்த கொள்கைகளைத் தற்காலம் கொண்டிருக்கும் இம் மதமானது ஆரம்ப காலம் முதல் எக்காலத்திலும் சாகபட்சணத்தைத் தன் கொள்கைகளில் கொண்டிருக்க வில்லை. உயிர் வதைதையையும், நர பலியையும், மாமிஸ உணவையும் தான் தனது கிரியைகளாகக் கொண்டிருந்தது என்று ஆராய்ச்சி வல்லவர்கள் நன் கறிவார்கள். புத்தர் காலம் வரை இம் மதம் இரத்த பலியையே தன் கருமமாகக் கொண்டிருந்தது பிரத்தியட்சம்.

சிவபெருமான் அல்லது சிவன் என்ற தெய்வ உருவம் இம் மதத்தின் தேவதை யாகும். இத் தெய்வம் சத்துருக்களின் தலைகளை மாலையாகக் கோத்து அணிந்திருப்பதும் மண்டை ஓட்டைப் பிக்ஷா பாத்திரமாகக் கொண்டிருப்பதும் புலித்தோல் யானைத் தோல்களை அணிந்து கொண்டிருப்பதாகக் கூறுவதும், இத் தெய்வத்தின் மாமிஸ பிரி

யத்தை நன்கு காட்டுகின்ற தல்லவா? திரிபுரங்களை எரித்ததும் தக்ஷ யாகத்தைக் கெடுத்ததும், மழு, சூலம், வாள், முதலிய கொலைக்குரிய ஆயுதங்களை இத் தெய்வம் அணிந்து நடமாடுவதும் புராணங்களில் கூறப்படும்போது சிவம் அல்லது சிவஸ்ரூபம் கொலைப் பிரியமும் இரத்த நசையும் உள்ள தெய்வமாக இருப்பதை நமக்குப் புலப்படுத்த வில்லையா? கண்ணப்பன் என்ற வேடன் அளித்த மாமிஸ உணவையும் சிறுத்தொண்டர் பிள்ளைக்கறியையும் உண்டதாகக் கூறப்படும் இத் தெய்வம் மாமிஸ உணவின்றி மதக்கரி யுணவை ஆதரித்ததாகக் கூற முடியுமா? தென்னாட்டில் வேலன் என்ற மலைத்தெய்வம் பிற்காலத்தில் முருகன், சுப்பிரமணியன் சிவபிரானின் புத்திரன் என்று மறு நாமங்களிட்டு அழைக்கப்பட்ட போதிலும் இத் தெய்வத்திற்கு இன்றும் சாதாரண ஜனங்கள் ஆடு கோழிகளை வெட்டிப் பூஜை யிடுவதை யாவரும் பார்க்கலாம். அன்றியும், இந்தச் சைவ மதத்தில் மற்றொரு பெரிய பிரிவு இருப்பதை நாம் கவனித்தல் வேண்டும், அப்பிரிவை நாம் நினைக்கும்போ தெல்லாம் நமது மனம் நடுங்குகின்றது. கை, கால், உடல் இவை வெயர்க்கின்றன. இதுவே 'சக்தி' மதமாகும். சக்தி யென்பது "சிவம்" என்ற தெய்வத்தின் பெண்ணுருவம் அல்லது சர்வ சக்தி என்று அர்த்தமாகும், இதையே பார்வதி, உமை, சிவபிரானின் பத்தினியான "சிவை" என்று சைவநூல்கள் ஓலமிடுவது. இந்தச் சக்தி என்ற பெண் தெய்வமே காளி, துர்க்கை, சாமுண்டி, பத்திர காளி, பிடாரி, மாயை, மஹாமாயை என்ற பல நாமங்களைக் கொண்டு அறிவுடையோராலும் சாதாரண ஜனங்களாலும் ஆராதிக்கப்படுகிறது. இத்தேவியின் ஆராதனைக்குட்படாத, சைவனாவது, வைணவனாவது தற்போதும் நம் நாட்டில் இல்லை. இத்தெய்வத்தின் சரித்திரமும், கொள்கைகளும், இரத்த வெறியும் உலகமெல்லாம் தெரிந்த தாகும். சாக்தேய புராணங்களும், காளி கோவில்களும் நரபலி, மஹிஷபலி, மிருகபலிகள் முதலியன இன்றும் விடாமல் நடந்துவரும் கொலை பாதகங்களும், உலகமெல்லாம் அறியும். இங்கு நாம் எடுத்துக் கூறுவது கூறியது கூறலாக முடியும்.

ஆகவே, சைவமதத்தின் சிவபாகமும் சக்திபாகமும் மிருக பலிகளாலும் இரத்த வெறியாலும் நிரம்பி யிருப்பதால் இம்

மதங்களும் மாமிஸ போஜனமும்

மதம் மாமிஸ உணவாகிய அஸ்திபாரத்தின் பேரிலேயே கட்டப்பட்டிருக்கிற தென்பதை நாம் வற்புறுத்தல் மிகையே யாகும். இனி,

வைஷ்ணவமும் மாமிஸ உணவும்

என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். விஷ்ணுமூர்த்தியின் சரித்திரத்தில் மதுகயிடவ யுத்தம் முதல் மஹாபாரத யுத்தம் வரை மனிதவர்க்க வதையும் ஜீவ வதையும் நிரம்பியிருப்பதை யாவரால் மறுக்க முடியும். விஷ்ணுமூர்த்தியின் அவதாரங்களில் பெரும்பாலானவை மாமிஸ போஜன உருவங்களே யாகும். நரசிம்ம அவதாரம் மானிட வதையை ஜீவ வதையாகப் பகவான் நினைக்கவில்லையென்பதைக் காட்டவில்லையா? இராமன் கிருஷ்ணன் முதலிய அவதார விஷ்ணு ரூபங்கள் மாமிஸ போஜனம் செய்யவில்லை யென்றும் சாக பட்சணிக ளாகவே யிருந்தார்க ளென்றும் நிரூபிக்க முடியுமா? விஷ்ணு பக்தர்களில் பெரும்பாலோர் மாமிஸ பட்சணிகளே. வைணவச் சேர்க்கை இந்தியாவில் ஜாதி வித்தியாசம் பற்றாத காலத்ததாக இருந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. மனு தரும சாஸ்திரம் எழுதப்பட்ட காலத்தில் நம் நாட்டில் வைணவம் மலின நிலையி லிருந்ததற்குக் காரணம் அம் மதத்தின் நிலையற்ற கொள்கையாகும் என்றும் ஆகையால் அந் நீதி நூல் மாமிஸ போஜனத்தில் தோஷம் கற்பிக்கவில்லை யென்றும் கூறுகிறது.

போது.

இந்து மதம் வேட்டை யாடுவதில் பாவ மில்லை யென்றும் அது துஷ்ட நிக்கிரக மென்றும் ஒப்புக்கொள்வதால் வேட்டை யாடிய ஜீவராசிகள் உணவுக்கே பயன்பட்டு வந்தன. மஹாபாரத காலத்தில் மாமிஸ போஜனமே ரிஷிகளுடைய உணவா யிருந்ததாகத் தெரிகிறது. அரசர்களும் பிராமணர்களும் வில்வித்தையிலும் ஆயுதப் பயிற்சியிலும் தேர்ந்தவர்களாக இருந்தது பிரத்தியட்ச மாகும். ஆகவே பந்தி போஜன பேதமும், மாமிஸ போஜன வெறுப்பும் தீண்டாமையையும் அக்காலத்தில் இருந்த தில்லை. ஒவ்வொரு ஊரிலும் அரசாங்க அரண்மனைகளிலும் மடங்களிலும், யாக சாலைகளிலும், கோவில்களிலும், நல்ல மாமிஸங்களைத் தினசரி கொண்டு வந்து கொடுப்பதற்காக ஒரு வகுப்

பார் பிரத்தியேகமாக இருந்துகொண்டே யிருந்தார்கள். அவர்களுக்குப் பிரத்தியேகமான மானிபங்களும் சம்பளங்களும் ஏற்பட்டிருந்தன. அவர்கள் அந்தந்த ஸ்தாபனங்களுக்கும் குடும்பங்களுக்கும், கிராமங்களுக்கும், பூஜைகளுக்கும், யாகங்களுக்கும் மாமிஸம் கொடுத்துக்கொண்டே யிருந்தார்கள். சிரார்த்த காலத்திலும், விருந்தளிக்கும் போதும், கலியாணங்களிலும், சகல ஜாதியாரும் மாமிஸமின்றி உண வருந்துவதில்லை யென்பதை விரதமாகக் கொண்டிருந்தார்கள்.

பிராமணர்களும் மாமிஸ உணவும்

நமது நாட்டில் விசேஷமாகப் பிராமணர்களே மாமிஸ போஜனத்தில் முதன்மை பெற்றிருந்தார்கள். ஏனெனில் பிராமணர்களே வேத கர்த்தாக்கள். பிராமணர்களே யுத்தப் பயிற்சிக் கூடங்களின் தலைவர்கள். ஆயுதப் படையும், கொலை வித்தையும் பிராமணர்களே க்ஷத்திரியர்களுக்கும் மற்றையோருக்கும் பழக்கி வந்தார்கள். ஆகவே பிராமணர்கள் அக்காலத்தில் ஒரு நாளேனும் மாமிஸ உணவின்றி யிருந்த தில்லை. பிராமணர்களின் யாகமும், அவர்களின் தேவதைகளும், இரத்தத்தையும் மாமிசத்தையும் விரும்பியதாகவே யிருந்தது. பிராமணர்கள் இக்காலத்தில் கூட சிரார்த்த காலத்தில் உணவருந்தும் பிதுர் தெய்வ, பிராமணர்களுக்கு மதுவுக்குப் பதிலாகத் தேனும், மாமிஸத்திற்குப் பதிலாக உழுந்தும் பிரதிநிதி யென்று சமஸ்கிருத மந்திரங்களால் சொல்லி மாமிஸத்துடன் உணவுண்டு திருப்தி யடைந்ததாகச் சொல்லும்படி செய்கிறார்கள்.

கேவலம் பிதுர்தேவ கருமங்களில் தான் நமது நாட்டார் மாமிஸ உணவைப் பிரதான ஆகாரமாகக் கொண்டிருந்தார்கள் என்று நினைத்தல் வேண்டாம். விவாகம், விருந்து, சந்தோஷ காலங்களிலும் மாமிஸ உணவின்றிச் செய்யும் வழக்கமே யில்லை என்பதை முன்பே விளக்கியுள்ளோம். பொதுவாக அக்காலத்து நம்மவர்களின் குடிவாழ்வு தற்போது ஐரோப்பிய மேல்நாட்டாரது குடிவாழ்வையும் மகம்மதியர்களது குடிவாழ்வையும் போலவே மது மாமிஸ பான உணவுகளால் நிரம்பியதாக இருந்தது.

மதங்களும் மாமிஸ போஜனமும்

கோவில் பூஜாரியும், புரோகிதனும், குருவும், மடாதிபதியும், உபதேசியும், விதவையும், பிரமசாரியும், சகலருமே மாமிஸ உணவைத் தங்கள் வாழ்நாளின் ஆதாரவாகக் கொண்டே வாழ்ந்தார்கள்.

தனித் தமிழரும் மாமிஸ உணவும்

தனித்தமிழர் அல்லது திராவிடர் தென்னாட்டில் வசித்து வந்தார்களென்றும் அவர்கள் கொள்கைகளும் ஆசாரங்களும் மிக வேறுபட்டதாக இருந்ததாகவும் ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து தெற்கே இந்தியாவிற்குள் நுழைந்த பிறகே திராவிடர்கள் ஆரியரால் வெல்லப்பட்டும் ஒன்று சேர்க்கப்பட்டும் போயினரென்றும் ஒரு பெரிய பொய்க் கதை நமது நாட்டில் பாவி வந்திருக்கிறது. இக் கட்டுக் கதையை நம்புவோர் இக்காலத்தில் அதிகப்பட்டு வருகிறார்கள். இக்கதைக்குச் சற்றேனும் சரித்திர ஆதாரம் இல்லவேயில்லையென்று நாம் கூறுவோம். லோகமானிய திலகரும் இப் பொய்க்கதையை நம்பிப் பெரிய புஸ்தகம் எழுதியிருப்பது மிகவும் விசனகரமானதாகும். அநேகம் படித்த இந்தியர்கள் இந்தப் பொய்யை நம்புகிறார்கள். தற் பயிற்சியின்மையே இதற்குக் காரணமாகும். திராவிடன் அல்லது தமிழன் என்ற ஒரு பிரத்தியேகமான மனித ஜாதி தென்னிந்தியாவில் தனித்து வாழ்ந்து வரவேயில்லை. தற்போதுள்ள திராவிடர் அல்லது தமிழர்கள் எல்லோரும் ஆரியர்களேயாவார்கள். ஆனால் தமிழ், தெலுங்கு, துளுவம் முதலிய பாஷைகள் எப்போதுமே நம் நாட்டில் இருந்ததாகும். அப்பாஷைகளைப் பேசுவோரும் எப்பொழுதும் இருந்தார்கள். அவர்களும் ஆரியரே. ஆரியன் தமிழ் பாஷை பேசும் நாட்டிலிருந்தால் தமிழனாகவும் தெலுங்கு பேசும் நாட்டிலோ, வங்காளி பேசும் நாட்டிலோ இருந்தால் அந்த அந்த பாஷைக்குரியவனாகவும் இருந்து வந்தான். ஆரியர்களே இல்லாதிருந்து பிற்காலத்தில் வந்தவர்களென்றும் திராவிடர் அல்லது தமிழர் என்ற "காக்கேசிய" வகுப்பு அல்லது ஆரிய வகுப்பைச் சேர்ந்த ஒரு தனி ஜாதியார் தென்னாட்டில் வசித்தார்களென்றும் கூறும் கதை சுத்தப் பொய்யேயாகும்.

கீழே கண்ட உதாரணம் நாம் கூறுவதை நன்கு விளக்குவதாகும். இந்தியாவின் வட பாகமும் கீழ் பாக

மும், "மங்கோலிய" மஞ்சள் வருண வகுப்பாரால் சூழப் பட்டிருக்கத் தெற்கும் மேற்கும் கடலால் கவரப்பட்டிருக்க, "காக்கேசிய" அழகிய வகுப்பைச் சேர்ந்த திராவிடர் அல்லது தமிழர் மட்டும் இந்தியாவின் தென் கோடியில் ஒட்டி ஒதுங்கி எப்படி வாழ்ந்து வர முடியும்! நாட்டின் மற்றப் பாகங்களில் தமிழ ரல்லாத மற்ற ஜாதியார் வசித்து வரவில்லையா? காக்கேசிய வகுப்பைச் சேர்ந்த ஆரியர்கள், அரபியர்கள், துருக்கர்கள், ஐரோப்பியர்கள், ஜர்மனியர் கள், ருஷியர்கள், சாக்ஸன் வகுப்பைச் சேர்ந்த இங்கிலீஷ் காரர்கள் ஆகிய இந்தப் பெரும் பகுதியாரான ஆரியர்க ளின் முக உருவம், பழக்க வழக்கங்கள், அழகு ஆகிய இவைகளுக்கும் தனித் தமிழர்களின் உருவத்திற்கும் ஏதேனும் வித்தியாசம் உண்டா? இல்லையாயின் இந்தத் தனித் தமிழர்கள் ஆரியர் அல்லது காக்கேசியர்கள் தான் என்பதில் என்ன தடை யிருக்கிறது? ஆகையால் தனித் தமிழன் அல்லது திராவிடன் என்ற ஒரு தனி மனித வகுப்பு இவ் வுலகத்திலேயே யில்லையென்றும் ஆரியர்க ளும், ஐரோப்பியரும் அராபியரும், தனித் தமிழரும் ஒரே சந்ததியாராகிய காக்கேசிய வகுப்பையே சேர்ந்தவர்கள் என்றும் அறியவேண்டியது.

இவர்களின் உணவும் குடியும் மாமிஸ மதுக்களே யன்றி வேறில்லை. மாமிஸ மில்லாத ஒரு உணவு உண்டு என்று இந்த தனித் தமிழர்களுக்குத் தெரியவே தெரி யாது. ஆரியர்கள் எப்படி மிருக மாமிஸ பக்ஷணிகளோ அது போலவே அன்னாரின் ஒரே வயிற்றுச் சகோதரனை தமிழரும் மிருக மாமிஸ பட்சணிகளே யாவார்கள்.

தமிழ் நாட்டுச் சரித்திரங்கள் சமீப காலம் வரையி லுள்ள வரையில் மாமிஸ போஜன மின்றி வேறு உண வறியாத தாகும். இவ் வியாசமானது பழைய நூல்களி லிருந்து உதாரணங்களை எடுத்து எழுதிக் காட்டுவதற்காக அல்ல. ஆகையால் நாம் எடுத் தெழுதாது விட்டோம்.

தமிழர்களின் தெய்வம் புத்த காலத்திற்கு முன் எக் காலத்திலும் சாகபட்சணம் அறிந்ததாகத் தமிழ்ச் சரித் திரங்கள் கூறவே யில்லை.

மேலே நாம் கூறிய படி தனித் தமிழ்நாட்டு வைதீக னும் லௌகீகனும் பெண்ணும் விவசாயியும் கத்தியும் கையு

மாகவே வேட்டையாடி ஊன் உண்டு, ரசம் குடித்து வாழ்ந்து வந்தார்கள் என்பதற்குரிய ஆதாரங்கள் சங்க நூல்களில் நிரம்பிக் கிடக்கின்றன. ஆகவே தனித் தமிழன் அல்லது திராவிடன் அல்லது ஆரியன் அல்லது காக்கேசியனுகிய இத்தனித் தமிழனும் மாமிஸ போஜன வகுப்பைச் சேர்ந்தவனே யாவான் என்று நாம் சித்தாந்தம் செய்வோமாக.

புத்த மதமும் மாமிஸ உணவும்.

நமது கௌதம சாக்கிய முனிவரான புத்தபிரான் நமது பாரத நாட்டில் அவதாரம் செய்த பிறகே மானிட உணவிலும் மாமிஸ வாழ்விலும், மானிட ஜீவகாருண்ணியத்திலும் புதிய ஒளியும் பிரகாசமும் தோன்ற ஆரம்பித்தது. மகா பாரத காலத்திற்கு வெகு காலத்திற்குப் பின்பு வரையிலும் மனித சமூகம் மாமிஸம், சாகம், ஆகிய இரு உணவும் இன்றி உயிர்வாழ முடியாது என்று கொண்டிருந்த பொய் நம்பிக்கையைப் புத்த பிரானின் போதனைகள் அடியோடு மாற்றியது மிகுந்த ஆச்சரியமாகவே அக்காலத்தில் தோன்றிற்று.

தற்போது மகாத்மா காந்தியின் அஹிம்ஸா போதனைகளை அவரினும் படித்த புத்திமான்கள் எவ்வாறு இகழ்ந்து கேலி செய்து இகழ்கின்றூர்களோ அவரைப் பழிக்கின்றூர்களோ, அவருக்கு விரோதமாக எதிர்க்கின்றூர்களோ அது போலவே அக்காலத்தில் பகவான் புத்தரின் அஹிம்ஸா தருமத்தை எதிர்த்து வாதாடி இம்ஸையை விடமாட்டோம் என்று போராடி வந்தவர்கள் பல்லாயிரம் பேராவர்.

மாமிஸ போஜனமும் ஜீவ வதையும் கூடாதென்று புத்தபிரானும் அவாது உத்தம சீடர்களும் போதித்து வந்தபோது அவர்களை எதிர்த்தவர்கள் அரசர்களுமல்ல, விவசாயிகளு மல்ல, மற்றோரும் அல்ல. சிறந்த விவேகிகளென்றும் உயர்ந்த ஜாதியாரென்றும் தங்களைத் தாங்களே சொல்லிக்கொள்ளும் பிராமணர்களே யாவார்கள். மாமிஸ போஜனமின்றி நாங்கள் ஜீவிக்க முடியாதென்றும் யாகபலி இன்றி நாங்கள் முத்தி யடைய மாட்டோம் என்றும் வாதித்து புத்த பகவானுக்கு எங்கும் எப்போதும் விரோதம் செய்து எதிர்த்தவர்களும் மற்ற ஜாதியாரையும் தூண்டி

விட்டுப் போர் புரிந்தவர்களும் பிராமணர்களே யாவார்கள். இப்பிராமணப் போராட்டங்களைப்பற்றி புத்த சரித்திரமும் நாட்டின் கல்வெட்டுச் சிலா சாசனங்களும் இன்றும் ஓலமிடு கின்றன.

ஆயினும் மற்ற நாடுகளில் எப்படி யானு லென்ன நம் பாரத நாட்டில் பகவான் புத்தரின் கொள்கைகளும் மதமும் சம்பூரணமாக நிலைக்காவிட்ட போதிலும் அவரது ஜீவகாருண்ய போதனைகளில் மாமிஸ உணவின் நீக்கமும் சாக உணவின் ஆக்கமும் நிலைத்து விட்டது. அப்புகழ் அம்மகானுக்கே சொந்தம் என்று நாம் வாழ்த்துவோமாக.

கௌதம சாக்கிய முனிவரின் கொள்கைகளையே பக வான் சங்கராசாரியாரும் பகவான் ராமாநுஜ ஆசாரி யாரும் நீலகண்ட சிவாசாரிய சைவபீடமும் முழுமனத் துடன் ஆதரிக்கத் தொடங்கின. புத்த போதனைகளும் புத்த தருமங்களும் அவர் காலத்திற்குப் பின்னுலேயே பிரகாசிக்கத் தொடங்கின. புத்த காலமாகி ஆயிரம் வருடங் களுக்குப் பின்பே சங்கராசாரியாரும் அதன் பின் சைவ, வைணவ மதச் சீர்திருத்தங்களும் உண்டாயின. சாக உணவு சைவன் வீட்டிலும் வைணவன் திருமாளிகை யிலும் ஸ்திரப்பட்ட காலம் புராண காலமாகிய சமீபித்த காலமேயன்றி வெகு வெகு லட்சம் வருஷங்களுக்கு முன் பல்ல.

புராண காலமும் மாமிஸ உணவும்

புராண காலம் கேவலம் கிறிஸ்து பிறந்து ஐந் நூறுண்டுகளுக்குப் பிந்தியதே யாகும். புராண காலம் என்று நாம் கூறுவதை நமது நேயர்கள் புராணங்கள் எழுதி வைத்த காலம் என்று பொருள் படுத்த வேண்டும். அக்காலத்தில் பெரும்பாலாகச் சைவர்களும் வைணவர்க ளும் மாமிஸ போஜனத்தை நீக்குவதை ஒப்புக் கொண்டு தங்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் பூரண அனுஷ்டா னத்திற்குக் கொண்டு வந்து விட்டார்கள். ரத்தத்தின் மீதும் மாமிஸத்தின்மீதும் இருந்த பேரவா மாறி வெறுப் பும், துவேஷமும் அக்கருமங்கள் ஜீவவதை என்ற ஞானமும் உண்டாகி விட்டன.

இந் நிலையும் தற்போதும் நம் நாட்டில் மிகவும் சிறி தளவே யாகும். நன்கு ஆராயின் நூற்றுக்கு ஐந்து அல்லது

பத்துப் பங்கு ஜனங்களே தங்களை மாமிஸ உணவில் சைவர்கள் என்று சொல்லத் தகுந்த நிலையில் இருக்கிறார்கள். இந்நிலை நன்னிலை என்று கூறுவதில் நமக்கு மிகவும் விருப்பமே யாகும்.

இந்நிலை இனி வளருமா அழியுமா என்பதைப் பற்றியும் எவ்வாறு ஆனால் நாட்டிற்கும் மதத்திற்கும் உலகத்திற்கும் நன்மையுண்டாகும் என்பதைப்பற்றியும் மறு வியாசத்தில் ஆராய உத்தேசித்துள்ளோம். எப்படி யிருப்பினும் நாட்டிற்கும் உலகத்திற்கும் நன்மை செய்யும் கொள்கை எதுவோ அதையே நாம் ஆதரிப்போமென்று துணிந்து கூறுவோம்.

குறிப்பு:—இந்த அரிய வியாசத்தில் பாரபட்ச மற்றும், அபிமான மற்றும் நாம் விவகரித்திருப்பதால் நமது நண்பர்கள் இதை ஒரு அரிய ஆராய்ச்சியாக எடுத்துக் கொண்டு உற்சாகப் படுத்துவார்களென்று நம்புகிறோம். அடுத்த வியாசத்தில் இனியும் சில அரிய கொள்கைகளை எடுத்துக்காட்டி நமது ஆராய்ச்சியை வளர்க்க முயல்வோமாக.

வந்தேமாதரம்.

உறக்கமில்லா வாழ்வு

(வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் எழுதியது)

நவ நாகரிகத்தில் அதிகமாய் உழன்றவர்களே போல நம்மிற் பலர் முற்காலத்திய பழக்க வழக்கங்களைக் கொண்டிருப்போரைக் ‘கர்நாடகம்’ என்றும் ‘வைதிகப் பித்து’ என்றும் ஏசிப் பரிகசிக்கின்றன ரன்றோ? இங்ஙனம் பிறரைப் பரிகசிப்பதில் பிரியங்கொண்ட நமது சகோதரர்கள் வருங் காலத்தில் இருக்கக்கூடிய மனிதர் குழாத்தின் தன்மை பழக்கம் ஆகிய இவற்றை அறியட்டும். அவ் விஷயங்களை இத்தகையோர் அறிவரேல் அளவிலா ஆச்சரிய மடைந்து, தங்களையே ‘கர்நாடகம்’ என எண்ணுவர் என்பதற் கைய மில்லை.

லக்ஷ்மி

மனிதன் பல விதமான புது விஷயங்களைத் தினந் தோறும் கண்டுபிடித்து வருகிறான்; அது மட்டு மல்ல. இவ் வித புது விஷயங்களைக் கண்டு பிடிப்பதால் அவற்றைக் கொண்டு அநேக உபயோகங்களும் செய்து கொள்ளுகிறான் என்றுங் கூறவேண்டும். நமது தேசத்தைப் பற்றியே ஆராய்வோம்; ஒரு வருடத்திற்கு முன் இருந்த இந்தியாவா இது? கொஞ்ச காலமான ஒரு வருடத்திலே இவ்வித மாகவே இப் பூவுலகின் கண்ணுள்ள எல்லா தேசங்களும் மாறுத லடையாவோ? இப்படியே நூற்றுக் கணக்கான வருடங்கள் கழிந்த பின்னர் இப் பூ வுலகமே அடியோடு மாறுத லடைந் திராதோ? 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' பூ வுலகின் தன்மை தானே?

இவ்வித யூகங்களையும் உண்மைகளையும் மனதில் தாங்கி எதிர்கால மிருக்கக் கூடிய மாதிரியையும் அக்காலத்தில் வாழப்போகும் மனிதரது நடவடிக்கைகளையும் ரஸாயன பண்டிதர் பலர் ஒருவாறாக யூகித்திருக்கின்றனர். இப்பொழு திருந்து ஆயிர வருடங்கள் கழிந்த பின்னர் ஆண் பெண் ஆகிய இரு பாலாரும் தங்கள் சிரத்தில் ரோம மென்பது அடியோடே இல்லாம லிருப்பராம். பஞ்சு அல்லது கம்பளம் ஆகிய இரண்டுள் ஏதாவது ஒன்றால் தயாரிக்கப்பட்ட ஒரு சிற்றாடையே இரு திறத்தார்க்கும் ஆடையா யிருந்து மனி தர்கட்குப் பலத்தையும் சௌகர்யத்தையும் உண்டுபண்ணு மாம். பளபளப்பான அழகிய தோற்ற முடைய ஆடை கள் பலவற்றைப் பிறரை வசீகரிக்குமாறு நாம் இக்காலத்தில் அணிந்து அலைவதே போல அவர்கள் அணியப் போவதில்லை யாம். ஆளை மயக்கித் தள்ளிக் குறைந்தது எட்டுமணி நேரம் உறங்கச் செய்யும் 'தூக்கம்' எனும் பேய் வருங் காலத் தில் மனிதரை விட்டு அடியோடு விலகி விடுமாம். 'கிளிக்' என்ற சப்தத்தில் 'சரே'லென்று இந் நாளைய மின்சார விளக்குகள் எரிவதே போல, மனிதன் தான் உணவு உட் கொள்ளுவதற்கும் மின்சாரப் பொத்தான்களை அழுத்த நேரிடுமாம். இங்ஙனம் அவன் செய்வனேல் அவன் விரும் பும் உணவுப் பண்டம் குழாய்களின் வழியாய் அவன் வாயை அடையுமாம்! பசிப் பிணியை ஆற்றக்கூடிய எல்லா உணவு களும் நூதன முறைகளைக்கொண்டு செய்யப்படுமாம்; தவிர அவைகள் அதிக மலிவாயும் அதிக மிதமாயும் கிடைக்குமாம்.

அதிக வெப்பமாவது குளிராவது நம்மை அண்டி உபத்திர விக்காதபடி சௌகர்யமான கால நிலை உண்டாக்கிக் கொள்ளப்படுமாம். தவிர சூர்ய வெளிச்சமே போன்ற வெளிச்சமும் உண்டாக்கப்பட்டு அதனால் நமது சரீரங்கள் எப்பொழுதும் ஆரோக்கியமான நிலைமையில் இருக்கும்படி வைத்துக்கொள்ள முடியுமாம் என்று இவ்விதமாகத் தற்காலத்திய பௌதிக சாஸ்திரிகள் வருங்கால வாழ்க்கையின் தன்மையைப் பற்றிக் கூறிக்கொள்ளுகிறார்கள்.

அவர்களுள் ஒருவரான 'புரொபஸர் எ. எம். லோ' (Professor A. M. Low) என்பவர் தாம் எழுதியுள்ள 'வருங்காலம்' (The Future) என்ற புத்தகத்தில் பின் வருமாறு கூறுகிறார்:—

வருங்கால வாழ்வைப் பற்றி நான் கூறுவன அடிப்படையும் ஆதாரமுமற்ற கனவென நினைக்காதீர்கள். நவீன நாகரிகம் இதுகாறும் அடைந்துள்ள பலவித மாறுதல்களையும் மிக ஆழ்ந்து யோசித்தே நான் வருங்கால வர்த்தமானத்தைச் சொல்லுகிறேன்.

"சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர்தான் கம்பியில்லாத் தந்தியைக்கொண்டு கொஞ்ச தூரமே பேச முடிந்தது. ஆனால் இப்பொழுது அது அளவற்ற தூரம் செல்லக் கூடியபடி ஆச்சரியமான விதமாய் மாறுதலடைந்திருப்பதைக் கவனியுங்கள். இப்பொழுது சந்திர மண்டலத்திற்கும் பூமண்டலத்திற்கும் உள்ள எல்லா வித்தியாசங்களையும் ரஸாயன பண்டிதர் கண்டு பிடித்திருக்கின்றனர். ஆச்சரியம் பயக்கத் தக்க விஷயங்கள் பல மேன் மேலும் இப்பொழுது நடந்து வருகையில் அடுத்த நிமிஷத்திலோ அல்லது வருடத்திலோ நடக்க விருப்பதை நாம் ஆச்சரியமென்றோ ஆகாத காரியமென்றோ எப்படிக் கூற முடியும்?

"மனிதன் ஒய்வு கொண்டு உறங்கும் நேரம் வீணாக உபயோகமின்றிக் கழிக்கப் படுகிறதே யன்றோ? ஈயும் எறும்பும் ஒருபோதும் தூங்குவதில்லை; அப்படியிருக்கும்போது மனிதன் மட்டும் ஏன் தூங்க வேண்டும்? அதிக உழைப்பினால் தளர்ந்து போயிருக்கும் தனது அவயவங்களுக்கு ஒய்வு கொடுத்து, தான் எழுந்தவுடன் ஊக்கத்துடனும புதிய சக்தியுடனும் எழுந்திருக்க வேண்டுமென் றன்றோ மனிதன்

உறங்கச் செல்லுகிருன்? நமது தேகத்திலுள்ள சக்தி ஒரு விதமான மின்சார சக்தி யென்பதை அனேவரும் ஒப்புக் கொள்வர்; ஆகவே இச் சக்தி தளர்வடைந்த போதிலும் புது ஊக்கத்துடன் கூடிய சக்தியை வேறு வழிகளால் பெற மனிதனுக்கு மார்க்கம் ஏற்பட்டு விடுமாயின் அவன் ஒரு தினத்தின் மூன்றில் ஒரு பங்கைத் தூக்கத்தில் செலவழிக்க வேண்டியிரா தன்ருே? இவ்விதமான புது உணர்ச்சியையும் ஊக்கத்தையும், நம்மிடம் எப்பொழுதும் உண்டாக்கிக் கொண்டிருக்குமாறு அதற்குத் தக்க விதமாய் நமது ஆடைகளும் எதிர் காலத்தில் அமைக்கப்படும்.

"தற்போது முகத்தில் மயிரிருந்தால் அதனே அவலட்சணமெனக் கருதும் ஸ்திரீகள் இப்பொழுதிருந்து ஆயிரம் வருடங்கள் கழிந்த பிறகு தங்கள் தலேயில் மயிரிருப்பதையும் அங்க பங்கமென் றெண்ணுவர். எதிர் காலத்தில் ஆண் பெண் இரு பாலாரும் வழுக்கைத் தலேயரா யிருப்பர். சுமார் இருநூறு முன்னூறு வருடங்களுக்கு முன்னர் இருந்ததை விடத் தற்போது நம்முடைய மயிர் மெல்லியதாயும் மிகக் குறைவாயு மிருப்பதே இதற்கு அத்தாட்சியாகும். மனிதன் ஆதியில் தனது சரீர முழுதும் ரோமமே நிறைந்த மர்க்கடமா யிருந்தான் என்பது சிலர் அபிப்பிராயம். அதன் பிரகாரமே பார்ப்போமானுல் தற்போது மனிதன் தேகத்தில் அடியோடு மயிரில்லேயே? எப்படிக் காலக்கிரமத்தில் தனது தேகத்திலுள்ள மயிரை இழந்து விட்டானே அங்ஙனமே இன்னும் கொஞ்ச காலத்தில் அவனது தலேயிலுள்ள மயிரும் அடியோடு மறைந்து போக ஆண் பெண் ஆகிய இரு வகையினரும் தலேமயிரின்றி இருப்பர் என்று கூறலா மல்லவா?

"எதிர் காலத்திய கெடியாரங்கள் இருபத்து நான்கு மணி நேரத்திலிருந்து நாற்பத்து நான்கு மணி நேரம் வரையில் மாறக்கூடிய சீதோஷ்ண ஸ்திதியின் மாறுதலே மிகச் சரியாக முன்னுடியே காண்பித்து விடும். இருந்த போதிலும் மனிதன் அப்பொழுது சீதோஷ்ண ஸ்திதியின் மாறுதலேப் பற்றிக் கொஞ்சமேனும் கவலே கொள்ளான். ஏனென்ருல் அப்பொழுது சீதள மற்றதும் சுகாதாரத்திற் கேற்றதுமான சீதோஷ்ணமே எப்பொழுது மிருக்கும்."

"செயற்கையாக உண்டாக்கப்படும் சூரிய வெளிச்சமே போன்ற வெளிச்சத்தில், இயற்கையான சூரிய வெளிச்சத்

தில் மட்டுமே சொஸ்தமாகக் கூடிய வியாதிகள் பல இது காறும் குண மடைந்திருக்கின்றன. ஆயிரம் வருடங்கள் கழிந்த பின்னர் சூரிய வெளிச்சமும், வெப்பமும் எப்பொழுதும் வீசும்படியான செயற்கை வழிகள் கண்டு பிடிக்கப்பட்டு வருஷம் முழுமையும் ஆரோக்கியமான சீதோஷ்ணமே நிறைந்திருக்குமாறு ஏற்பாடுகள் செய்யப்படும்.''

''பனியாலும் பனிக்கட்டியாலும் மூடப் பெற்ற அதிக குளிர் தேசங்களான வட தென் துருவங்களுக்கும் செயற்கை உஷ்ணம் வீசப்பட்டு மனிதர் சுலபமாய் வசிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்; அதனால் அவ் விடங்களில் ஜன சங்கியை அதிக மாகும். இதே மாதிரி அதி உஷ்ணம் பொருந்திய பாலை வனங்களில் மின்சார சக்தியைக் கொண்டு மழை பெய்வித்து அப்பாலை வனங்களைப் பலன் தரும் பூமிகளாக் கப்படும்.''

''வருங் காலத்திய மனிதன் தான் உணவு உட்கொள்ள வேண்டுமானால், மின்சார விளக்கு எரிய ஒரு பொத்தானை அழுத்துவதே போல, ஒரு பொத்தானை அழுத்துவான். மறு நிமிஷமே அவன் விரும்பிய உணவு குழாய்களின் வழியாய் அவன் வாயை அடையும். இங்ஙனம் எல்லோருக்கும் உணவு அளிக்குமாறு ஒரு இடத்தில் உணவு அதிகமாகச் சேகரம் செய்யப்பட்டிருக்கும்.''

'' தவிர ரஸாயன பண்டிதர்கள் எதிர் காலத்தில் பயிர்களை மின்சார சக்தியின் வாயிலாக அதி சுலபமாயும் செழிப்பாயும் சீக்கிரத்தில் வளரச் செய்வர். இரவும் பகலும் பயிர்கள் வளர்ந்து கொண்டே யிருக்குமாதலால் வருஷத்தில் இப்பொழுது விளைவதைப் போல இரண்டு மடங்காக இரண்டு போகங்கள் விளையும். ரஸாயன முறைகளின் மூலமாக ஏற்கனவே பயிர்கள் பதினெறடி உயரம் வளர்க்கப்பட் டிருப்பதே இதற்கு அறி குறி. இத்தகைய ஆச்சரியமான விஷயங்கள் இப்பொழுதே நிகழ்வதால் எதிர் காலத்தில் பின்னும் ஆச்சரியமான சம்பவங்கள் என்னென்ன நிகழுமோ?''

''உலகப் போக்கை அறிய நாம் இக்காலத்தில் தின சரி வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிக்கிறோம்; ஆனால் எதிர் காலத்தில் மனிதர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். ஒரு குமிழியைச் சுற்றுவதால் உலகத்தின் எப்பாகத்தில் நடப்ப தெதையும் வருங் காலத்திலிருக்கும் மனிதன் கண்ணு

ரக் காணவும் காதாரக் கேட்கவும் முடியும். தூர தரிசனம் நாளுக்கு நாள் அதிகமாகி வருவதால் எதிர் காலத்தில் மனிதர் உலகப் போக்கைப் படிக்க பத்திரிகை அவசியமில்லையென்றும், தாங்களே எல்லாவற்றையும் கண்டு கேட்கவும் முடியுமென்றும் கூறுவதில் ஆச்சரியமொன்றுமில்லை.''

" இக்காலத்தில் மனிதனை அதிகமாய் அவஸ்தைப்படுத்தும் வியாதிகள் பல எதிர்காலத்தில் அதி சுலபமாய் அதி சீக்கிரத்தில் சொஸ்தம் செய்யப்படும்.''

என்று மேல்கூறிய விதமாக 'புரொபஸர் லோ' தமது புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

இவர் கூறியிருப்பவை அனைத்தும் நமக்கு ஆகாத காரியங்களென்றோ ஆச்சரியமான ஆகமங்களென்றோ தோற்றலாம். ஆனால் நாளுக்கு நாள் அதி அற்புதமான விஷயங்கள் நம் கண் முன்னரே பிரத்தியட்சமாய் நிகழ்வதால் நாம் இவற்றை உண்மை என்றே நம்ப வேண்டியிருக்கிறது.

எந்தச் சம்பவங்களும் எவ்வளவு விநோதமாயும், அசம்பாவிதமாயும், ஆச்சரியமாயும், மாறியபோதிலும் அவையனைத்தையும் எங்கும் நிறைந்துள்ள எம்பெருமானது திருவிளையாடல்களென்று கூறுவதைத் தவிர நாம் வேறு என்னென்று சொல்ல முடியும் ?

கதிரவன் எழும் காலைக் காட்சி

(மதுரை எஸ். ஜி. இராமலிங்கய்பர் அவர்கள் எழுதியது.)

நெடிய கடல் சூழ்ந்த இப் பூவுலகின்கண் மாந்தர், விலங்கு, பக்ஷி, ஊர்வன முதலிய எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகளும் நித்திரா தேவியின் மயக்கத்திலாழ்ந்து பின், விடியற்காலையில் குணதிசையிற் றோன்றும் கதிரவனைக் கண்டு மகிழ்ச்சி யடைகின்றன. தக தக வென மின்னி அக முக மலர்ச்சியை அள்ளித் தூவும் கிரணங்களையுடைய ஆதித்தன் எழுங் காட்சி எவ்வளவு இனிமையாக இருக்கிறது ! கணக்

கற்றதும், யோசனைக்குப் புலப்படாததுமான அவ்வளவு காதங்களுக்கு அப்பால் கதிரவன் முளைத்தெழவே, காகங்கள் முதலிய பறவைகள் இன்னிசை புரிந்து, பொன்னிறமான இள வெயிலில் சிறந்து விளங்கிக் காண்போரது மனத்தைப் பரவசப் படுத்துகின்றன.

அந்த காரமே குடிகொண்டுள்ள அழகிய பூஞ்சோலைகளிலும், நந்தவனங்களிலும் தாமரை மலர்கள் தத்தம் அரும்புகளை மலர வைத்துக்கொண்டு, அப்போதைய மெல்லிய காற்றில் அதி உல்லாசமாக அசைவதும், வண்டினங்கள் கண்ட கண்ட குண்டு குண்டான பூக்களில் கள்ளை உண்டதால் மயக்கங் கொள்வதும், ரீங்காரஞ் செய்வதும் அண்மையில் மயில்களாடுவதும், சேய்மையில் குயில்கள் பாடுவதும் கண் கொள்ளாக் காட்சியா யிருக்கின்றன.

நாட்டுப்புறத்தின் புற்றரைகளில் அங்கு மிங்கும் ஆடு மாடுகள் குதூகலமாகக் குதித்துத் தாவி, ஒடித் திரிந்து புல் மேய்வதும், மலைப்பாங்கான பிரதேசங்களில் சஞ்சரியா நிற்கும் வெள்ளாடுகள் சாய்வான கற்பாறைகளில் சறுக்காமலேறி மரக் கிளைகளை முறித்து, இலைகளைப் பறித்து உட்கொள்வதும், பளிங்குபோலத் தெளிந்த ஜலப் பிரவாகத்தையுடைய சிற்ருறுகளும் ஓடைகளும் சலசல வென்ற சப்தத்தைக் கொடுப்பதும், நறுமணம் தரும் சிறு சிறு செடி கொடி பட பட வெனக் காற்றில் துடி துடிப்பதும், அண்ணுந்து பார்க்கும் படியான விண்ணுலாவும் விருக்ஷங்களில் கண்ணுக் கினிய வண்ணங்களைக் கொண்ட பக்ஷிக் கூட்டங்கள் பறப்பதும் பாடுவதும், கோதைகளை விரிப்பதும், குஞ்சுகளுக்கு உண வூட்டுவதும், மகிழ்ச்சியால் மரக்கிளைகளை ஆட்டுவதும், ஜோடி ஜோடியாகச் சேர்ந்த அன்றிற் பறவைகள் ஆதித்தனைக் கண்டுங் கூட இணை பிரியாது இன்பத்திலேயே ஆழ்ந்து, இம்மைப் பய னிதுவே யென்று நிலை நாட்டி இறுமாந் திருப்பதும் இங்கிதமான காட்சியின் மாட்சியே மாட்சி!

நகரங்களில், மேக மண்டலத்தை எட்டிப் பார்க்கும் மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் சத்திரங்களும், க்ஷேத்திரங்களும் கதிரவனது பிரகாசத்திற் பதிந்து கிடந்து, தங்கமுலாம் பூசப் பெற்றவை யென்று பொய்ப் பிரமாணஞ் செய்து மண்ணுலக விண்ணுலகமோ வெனும்படி மகா கம்

பீரமான தோற்றத்தை விளக்கிக் கொண்டிருக்க, அங்கை யின் புனலேற்றிய அந்தணர்கள் ஆதித்தனை நன்ருய்ப் பார்க்கக் கண் கூசியதால் அவைகளை மூடிக்கொண்டு மந்தி ரோடனஞ் செய்கிறதும், சிலர் புரோக்ஷித்துக் கொள்கிற தும் நிரம்பவும் திவ்யமான காட்சியே.

கோடானு கோடி விளக்குகள் ஒரே காலத்தில் கொளுத் தினல் கூட சூரியனது பிரகாசத்திற்கும் வெப்பத்திற்கும் உரைபோட முடியா தாகையால், தாமரை யில்லாத் தடா கம் போலும், மணாள னில்லா மங்கை போலும், குழந்தை யில்லாக் குடும்பம் போலும் கதிரவ னில்லாமற் போனல் மேலே வர்ணித்த இயற்கை விநோதங்கள் ஒன்றுக்கும் பயன் படாமற் போகுமன்ருே! ஒரு தினத்தில் கதிரவன் உதிக் காமற் போனல் இப் பிரபஞ்சத்தின் கண் தங்கும் மானிடர் களும் விலங்குகளும் மற்றுமுள்ள பிராணிகளும் அல்லோல கல்லோல மடைந்து மன முடைந்து நிம் மதியற்றுப் போவார்க ளென்ருல், இரவியின் சமூகம் எவ்வளவு முக்கிய மான தென்று இயம்பவும் வேண்டுமோ?

ஆகவே மனேக்கியமான மகிழ்ச்சியையும், ஆனந்தத் தையும் வாரி வாரி இறைக்கும் ஆதித்தனைக் கண்ணுற்று வழிபடுவது எவ்வளவு பரிசுத்தமான கொள்கை! அவனைக் கண்டதும், நமது இராப்போதைய மயக்கம், சோம்பல், சுரு சுருப்பின்மை முதலிய மனே சஞ்சலங்களும், தேக பாதைகளும் நிவர்த்தியாகி விடுகின்றன. நேயர்களே! நா மெல்லோரும் கதிரவன் எழு முன் படுக்கையை நீத்து, ஸ்னன முடித்து, அவனது வரவை எதிர் பார்த்து, கை குவித்து நெஞ்சாற வாயாறத் துதித்து வணங்குவோ மாயின், நாம் நிர்மலமான மன முடையவர்களாயும், சதா சந்தோஷகர மானவர் களாயும் மாறி விடுவோம் என்பதிற் சிறிதும் ஐயமில்லை யாதலால், பரம் பொருளாகிய பரம சிவன் நம்மை நல்வழிப் படுத்தி, நல்லெண்ணத்தைப் புகுத்தி நல்லவர்களாகும்படி அவனை நமஸ்கரித்து வருவோ மாக.

ரகுமாரன்

(142-ம் பக்கத் தொடர்ச்சி.)

நீ அந்தத் தங்கமாளிகையை அடைந்தவுடன் இந்த இரும்புக் கம்பியினால் அந்தக் கதவை யடித்தால், அந்த மாளிகையின் கதவு தானாகவே திறக்கும். அந்தக் கதவி னருகே மூன்று சிங்கங்கள் வாய்களை நன்றாய்ப் பிளந்து கொண்டு, உன்னைத் தின்னு மெண்ணத்துடன் நிற்கும். நீ இந்த ரொட்டித் துண்டுகளை ஒவ்வொன்றுக்கும் போட்டால் அவைகள் கொஞ்சநேரம் வரை அவைகளைத் தின்னுவதி லேயே கழித்துவிடும். பிறகு வெகு துரிதமாய் உள்ளே சென்று கொஞ்சம் ஜீவாம்ருதத்தை அங்குள்ள கிணற்றி னின்றும் எடுத்து, மணி 12 அடிப்பதற்குள் வெளியே வந்து விடவேண்டும். 12 மணிக்குள் வராவிட்டால் அந்தக் கதவு தானாகவே மூடிக்கொள்ளும். நீயும் அந்த அறையிலேயே அடைபட்டு விடுவாய்.

ரகுமாரன்:—ஞாபகம். அப்படியே போய் வருகிறேன்.

அத்தியாயம் 2.

தங்க மாளிகை.

பொன்மலைக் குள்ளனிடம் விடை பெற்றுக் கொண்டு தங்க மாளிகைக்குப் பிரயாண மானான். கடைசியாக அநேக நாட்கள் பிரயாணம் செய்து தங்க மாளிகையை அடைந்து, குள்ளன் சொன்னபடியே அந்தக் கதவை மூன்று தரம் இரும்புக் கம்பியினால் அடித்த தும் கதவு திறந்தது. குள்ளன் சொன்னபடியே அங்குள்ள மூன்று சிங்கங்களும் வாய்களைப் பிளந்துகொண்டிருந்தன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ரொட்டித் துண்டைப் போட்டுவிட்டு உள்ளே சென்றான்.

தங்க மாளிகைக்குள் ரகுமாரன் சென்று பார்க்கையில் அங்குள்ள முதற் கூடத்தில் ஒரு மேஜையின்மேல் வாளொன் றும் ரொட்டித் துண்டொன்றும் வைக்கப்பட்டிருந்தன. அவைகளை யெடுத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

அவன் அநேக அறைகளாய்ச் சென்று பார்த்த பிறகு, கடைசியாக ஒரு பெரிய அறையை யடைந்தான். அங்கு லக்ஷ்மிதேவி போல் வீற்றிருக்கும் ஒரு பெண்மணியைக் கண்டான். அவள் ரகுமாரனை நோக்கக் கீழ்க் காணும் விதமாய் மொழிந்தாள்.

"ராஜகுமாரா! உனது நல்வரவினால் எனக்குண்டான சந்தோஷம் அற்ப மன்று, நான் இவ்வளவு வருஷ காலமாய் ஒரு மந்திரக்காரியால் சபிக்கப்பட்டிருந்தேன். உன் முக தெரிசனத்தில் என் சாபமும் விமோசன மாயிற்று, எனது ராஜ்யமும் சுதந்திர மடைந்தது. இன்னும் ஒரு வருஷங் கழித்து இங்கே வந்தால் உன்னை விவாகஞ் செய்துகொள் ளச் சித்தமா யிருக்கிறேன்" என்றாள்.

பிறகு அவ் விருவரும் அரண்மனைகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஜீவாம்ருதம் நிறைந்த கிணற்றை யுடைய தோட்டத்தினுட் சென்றார்கள். அப்பொழுது கலாவதி என்று பெயர்கொண்ட அந்த ராஜகுமாரி, "காதலா! சற்றும் நீர் தாமதிக்கலாகாது, மணி பன்னிரண்டு அடிப்ப தற்குள் நீர் ஜலத்தை யெடுத்துக்கொண்டு வெளியிற் செல்லா விடில், இந்தக் கோட்டையின் கதவு தானாகவே மூடிக் கொள்ளும். அதனால் எனக்கும் உமக்கும் மிகுந்த சங்கடங் கள் நேரிடும்" என்று புன் முறுவலுடன் சொன்னாள்.

அவன் சொன்னதை ரகுமாரன் அவ்வளவு ஜாக் கிரதையாய்க் கவனிக்க வில்லை. நேராக ஜீவாம்ருதத்தைக் கொண்டு வருவதற்குப் பதிலாக அந்த அரண்மனையி லுள்ள மற்ற விநோதங்களைப் பார்த்துக்கொண்டே யிருந்துவிட் டான். கடைசியாக அவன் ஒரு அறையை அடைந்தான். அது படுக்கை யறை. அதிலிருந்த ஒரு சோபாவின் மேல் படுத்துக் கொண்டே நித்திரை போனான். கடைசியாக அவன் விழித்தெழுந்து பார்க்கையில் மணி 12 அடிக்க 15 நிமிஷங்க ளிருந்தது. உடனே மிகுந்த பயத்துடன் துள்ளி யெழுந்து கிணற்றிற்கு ஓடினான். அங்கே யிருந்த ஒரு கூஜாவின் நிறைய ஜலத்தை நிரப்பிக்கொண்டு, தன்னாற் கூடியமட்டும் ஓடி, அரண்மனையின் வெளியே வந்தான். அவன் வெளியில் வந்தானோ இல்லையோ மணியும் பன்னி ரண் டடித்தது. ஜீவநீரைக் கண்டு கொண்டதினால் மிகுந்த சந்தோஷங்கொண்டு வீட்டை நோக்கினான்.

வரும் வழியில் ரகுமாரன் குள்ளனைச் சந்தித்தான். குள்ளன் ராஜகுமாரன் கொண்டுவரும் வாளையும், ரொட்டித் துண்டையுங் கண்டு மன மகிழ்ச்சியுங் கொண்டு, "இந்த அருமையான சாமான்களை நீ மிகவுந் தந்திரமாய்க்கொண்டு வந்திருக்கிறாய், இந்த மாயக் கத்தியினால் ஒரே நிமிஷத்தில் ஒரு பெரிய சேனையையும் அழிக்கலாம். இந்த ரொட்டித் துண்டை எவ்வளவு தின்றாலும், ஒரு நாளும் அது குறை யாது. இந்த அற்புதமான சாமான்களைக் காட்டியதற் காகக் கடவுளுக்கு நான் வந்தனஞ் செய்கிறேன்" என்று சொன்னான்.

ரகுமாரனுக்குத் தனது தமயன்களில்லாமல், தான் மாத்திரம் தனது நகருக்குப் போய்த் தன் தந்தையைக் காணுவது அவ்வளவு மனதிற்குப் பிடிக்கவில்லை. குள்ளனை நோக்கி ரகுராமன், "நண்பா! எனக்கு இவ்வளவு தூரம் உதவி செய்த உனக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். என்னுடைய தமயன்களிருவரும் எங்கே யிருக் கிறார்களென உரைத்தால், அது எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கும். நான் வருவதற்கு முன்னரே அவர்கள் ஜீவாம்ருதத்தைக் கொண்டு வரச் சென்றவர்கள் இதுவரையும் திரும்பவில்லை" என உரைத்தான்.

குள்ளன்:—அது ஒரு லேசான காரியமே. அவர்கள் அகம்பாவம் பிடித்தவர்கள். மிகுந்த முரட்டுத்தனமாய் என்னுடன் பேசியதால், நான் கோபங்கொண்டு அவர்களை இம்மலைப் பாறைகளி னிடையே அடைத்து வைத்திருக் கிறேன். நீ மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிற படியால் அவர்களை விடுதலை செய்கிறேன். ஆனால் நீ அவர்கள் விஷ யத்தில் மிகுந்த ஜாக்கிரதையுட னிருக்கவேண்டும். அவர் கள் எக்காரியத்தையும் அஞ்சாமற் செய்யும் கொடியவர்க ளாதலால் அவர்களை நீ நம்பலாகாது, பத்திரமா யிரு?

பாறைகளினிடையே அடைபட்டிருந்த குலபாலனும், ஸ்ரீபாலனும், பாறைகள் விலகுவதைப் பார்த்து சந்தோஷங் கொண்டு விடுதலை யடைந்து வெளியே வந்தார்கள். ரகுமாரன் அவர்களைக் கண்டு சந்தோஷ மடைந்து, அவன் எப்படி ஜீவாம்ருதத்தைக் கண்டுபிடித்தான் என்பதையும், தங்க மாளிகையில் அவன் எப்படி சாபத்தினால் பீடிக்கப்பட் டிருந்த கலாவதியை விடுதலை செய்தான் என்பதையும்

சொன்னான். மற்றும் இன்னும் ஒரு வருஷ காலத்திற்குள் தனக்கும் கலாவதிக்கும் விவாஹமாகப் போகிறதென்பதை யும், பிறகு தானே தங்கமாளிகைக்கு ராஜன் என்பதையும், விரித் துரைத்தான்.

மூன்று அரச புத்திரர்களும் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர். வரும் வழியில் அவர்கள் சற்குண மகாராஜன் ஆளும் சங்கமாபுரத்தை அடைந்தார்கள். அந்த நகரமானது ஒரு கொடுங்கோல் செலுத்தும் மன்னனால் முற்றுகை செய்யப்பட்டிருந்தது, மேலும் அந்நகரமானது பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருந்தது. ரகுமாரன் தனது வாளினுதவியால் அந்நகரையும் காப்பாற்றி, அந்நகர மாந் தர்க்கு ரொட்டியையும் கொடுத்து உதவினான். அவன் இந்த நகருக்கு உதவி செய்யும்பொழுது, மூன்று ராஜ குமாரர்களும் ஒன்றாகவே யிருந்தார்கள். ஆனால் தங்கள் ஊருக்குப் போக வெகு தூர மிருந்ததினால், அவர்கள் கப்பல் வழியாய்ப் பிரயாணஞ் செய்ய வேண்டியதாயிற்று.

ரகுமாரன் ஜீவாம்ருதத்தைக் கொண்டு வந்ததுபற்றி யும், தங்களை விட ஒரு நல்ல பெயர் பெற்றிருப்பதையும் கண்டவுடன் குலபாலனுக்கும், ஸ்ரீபாலனுக்கு முண்டான கோபம் கொஞ்ச மல்ல, அவர்கள் கப்பலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபொழுது மூத்த இரு சகோதரர் களும் வருமாறு சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

குலபாலன்:—தம்பி! ரகுராமன் ஜீவாம்ருதத்தைக் கொண்டு நமது தகப்பனாரிடத்திற் கொடுத்தால், நம்மை அவர் நேசிப்பதைவிட அவனை அதிகமாக நேசிப்பார். அல்லாமலும் அவனுக்கே ராஜ்யத்தையும் கொடுத்து விடுவார். மூத்தவர்களாகிய நாம் இருக்கும்பொழுது அவனை அப்படிச் செய்துவிடக் கூடாது. இன்று அவன் தூங்கும் பொழுது அந்த ஜீவாம்ருதத்தை நாம் கொண்டு சென்று விடவேண்டும். என்ன சொல்லுகிறாய்.

ஸ்ரீபாலன்:—எல்லாம் உனக்குத் தெரியாததா? உன் இஷ்டப்படியே செய்.

அன்றிரவு ரகுமாரன் தூங்கும்பொழுது, அவனிட மிருந்து ஜீவாம்ருதத்தைத் தங்களுடைய ஜாடியிலடைத் துக்கொண்டு, அதற்குப் பதிலாக அவனுடைய பாத்தி ரத்தை சமுத்திர ஜலத்தினால் நிரப்பி வைத்தார்கள்.

எல்லாரும் க்ஷேமமாய் ஜெவந்திபுரத்தை யடைந்தார்கள். ரகுமாரன் சந்தோஷங்கொண்டு தான் கொண்டுவந்த ஜீவாம்ருதத்தை ஜகந்நாத பூபதியினிடம் கொடுத்தான். அவன், தான் கொண்டுவந்த ஜலத்தைக் குடித்ததினுல் அரசர் வியாதி தீருமென்றே யெண்ணியிருந்தான். அதற்கு மாருக, அது சமுத்திர ஜலமாகையால் அதைக் குடித்தவுடன் அரசருடைய வியாதி அதிக மாயிற்று.

குலபாலனும், ஸ்ரீபாலனும், உள்ளே வந்து, ரகுமாரனைக் கோபத்துடன் பார்த்தார்கள். உடனே அவர்கள் ரகுமாரனை நோக்கி, அவன் ஜீவாம்ருதத்தைக் கொண்டு வராமல், விஷங்கலந்த ஜலத்தைக் கொடுத்துத் தன் தகப்பனுரைக் கொல்ல நினைத்தானென்றும், அது தான் ராஜ்ஜீயத்தை அடையலாமென்ற எண்ணத்தினுல் செய்யப்பட்டதென்றுமுரைத்து, அவனைத் திட்டவும் முட்டவும் ஆரம்பித்தார்கள். "நாங்கள் தான் ஜீவாம்ருதத்தைக் கஷ்டத்துடன் கண்டுபிடித்தோம்" என்ருர்கள். குலபாலனும் ஸ்ரீபாலனும் அதை அவர்கள் அரசனிடங் கொடுத்தார்கள்.

ஜகந்நாத பூபதி அதைக் குடித்ததும், அது உண்மையான ஜீவ நீரானதால், அவரது வியாதி முற்றிலும் குணமடைந்தது.

இது இவ்வாருக, ஒரு நாள் காலை குலபாலன், தனியாய் அழுதுகொண் டிருக்கும் ரகுமாரனை நோக்கிச் சொன்னதாவது:—தம்பி! நீ அதிருஷ்ட சாலியில்லை. நீதான் உண்மையாய் இந்த ஜீவநீரைக் கண்டுபிடித்துக்கொண்டு வந்தாய். நீ மிகுந்த சிரமப்பட்டாய், ஆனுல் சிரம பலனை நாங்கள் அடைந்தோம். நீ கண்டுபிடித்துக்கொண்டு வந்தது மிகுந்த சாமர்த்தியமே, ஆனுல் அதை நீ மிகவும் ஜாக்கிரதையாய் இரவும் பகலும் விழித்துக்கொண்டே யிருந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். நீ துயிலும்பொழுது, நாங்கள் அதை மாற்றி ஜீவநீருக்குப் பதிலாக உனது பாத்திரத்தில் உப்பு ஜலத்தை விட்டு நிரப்பினேும். மேலும் நாங்கள் அடுத்த வருஷம் தங்கமாளிகைக்குப் போய், கலாவதியைக் கொண்டுவந்து, எங்களில் யாராவது கலியாணம் செய்து கொள்ளுவோம். இவ் விஷயங்களில் ஒன்றையாவது தகப்பனுரிடங் கூருதே. அவர் உன்மேல் கோபங்கொண் டிருக்கிருர். நீ ஏதாவது சொன்னுல், அதைப் பொய்

யென்று நினைத்து, உன்னைக் கொலை செய்துவிடுவார். ஆதலால் பேசாம லிருப்பதே உத்தமம். இவ் விஷயத்தைப் பற்றி ஒருவரிடமுங் கூறாதே.

ஜகந்நாத பூபதியும் ரகுமாரன் மேல் வாஸ்தவமாகவே கோபங்கொண்டிருக்கிறார். ஒருநாள் தனது மந்திரிமார்களை வரவழைத்து இதற்கென்ன யோசனை யென்று கேட்டார். அதற்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து ரகுராமன் துஷ்டனாகையினால் அவனைக் கொன்று விட வேண்டு மென்று பதி லுரைத்தார்கள்.

ரகுமாரன் வேட்டைக்காரனால் சுடப்பட வேண்டியது. அடுத்த வேட்டை தினத்தில் வேட்டைக்காரன் ரகுமாரனை அணுகிச் சமயம் நேர்ந்த பொழுது ஓரம்பினால், அவனை சுட்டுவிட வேண்டியது. இதைக் கேட்டவுடன் வேட்டைக்காரன் மிகவும் வருத்தப்பட்டான். ஏனென்றால், அவன் ரகுமாரனை மிகவும் அன்பாய் நேசித்துவந்தான்.

ரகுமாரனுக்கு இவ் விஷயம் ஒன்றும் தெரியாது. வேட்டையாட வேண்டிய தினத்தில் எல்லோருடனும் கூட வேட்டையாடச் சென்றான். வேட்டைக்காரன் மிகுந்த பிராணவஸ்தையி லிருப்பதை ரகுமாரன் கண்டான். அவனை அணுகி, "எதற்காக இப்படி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

வேட்டைக்காரன்:—அரசே! அதைச் சொல்லவும் என் நா வெழ வில்லையே!

ரகுமாரன்:—எதா யிருந்தாலும் சொல்லியே தீர வேண்டியது. அதற்காக உன்னைக் கோபிக்கமாட்டேன். நீ சொல்வது பொய்யா யிருந்தாலும் உன்னை மன்னித்து விடுகிறேன். சொல் சீக்கிரம்.

வேட்டைக்காரன்:—ஆ! நான் மிகவும் வருந்துகிறேன். ஏனென்றால், ஜகந்நாதபூபதி—உனது தகப்பனார்—உன்னைக் கொல்லும்படி எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார்.

இதைக் கேட்டவுடன் ரகுமாரன் ஆச்சரியப்பட்டானயினும், பயப்படவில்லை.

ரகுமாரன்:—உயிர்த் தோழா! என்னைக் காப்பாற்று. உன்னுடைய வேட்டைக்கார ஆடைகளை யென்னிடம் கொடுத்துவிடு, எனது அரச ஆடைகளை நான் தருகிறேன்,

என்னுடைய ஆடைகளை யெடுத்துக்கொண்டு போய் என் தகப்பனரிடம் காட்டினல், நான் இறந்ததாக அவர் எண்ணி விடுவார். அதனல் நம் மிருவருக்கும் லாபமே.

வேட்டைக்காரன்:—அப்படியே ஆகட்டும். எப்படி யாவது நீ பிழைத்தால் போதும். கடவுள் உன்னை யெப்படி யுங் காப்பாற்றுவார்.

பிறகு அவர்கள் ஆடைகளை மாற்றிக் கொண்டார்கள். வேட்டைக்காரன் அரண்மனைக்குத் திரும்பினன், ரகுமாரன் காட்டிலேயே தங்கிவிட்டான். (தொடரும்.)

பொது விஷயங்கள்

இப்பொழுது உயர்ந்த நிலைக்கு வந்திருக்கும் ஆகாய விமானி ஆலன் கோபாம் ஆரம்பத்தில் இன்னெருவருடன் கூட்டுச் சேர்ந்து ஒரு ஆகாய விமானம் வாங்கி, உல்லாசப் பிரயாண வாடகைக்கு விட்டவர் ஆலன் கோபாம். அவரு டைய கூட்டாளி இன்னும் வாடகை விமான ஓட்டியாகவே இருக்கிறார்.

பிற நாடுகளுக்குப் போய்ப் பார்க்க விரும்பும் மாண வர்களுக்கு வேண்டிய தகவல்கள் தெரிவிப்பதற்கும், உதவி கள் செய்வதற்குமாக, பம்பாய் யுனிவர்ஸிடியின் ஆதிக்கத் தின் கீழ் "மாணவர் இன்பர்மேஷன் பீரோ" ஒன்று நவம் பர் மீ 1வ முதல் அமைக்கப்பட்டுள்ளது.

கயையில் நான்கு மாதக் குழந்தை ஒன்றின் வயிறு பெரிதும் உப்பி யிருந்ததால், சிகிச்சைக்கு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாம். ரண வைத்தியர் சத்திரம் செய்தபோழுது இக் குழந்தையின் வயிற்றிற் குள்ளே ஒரு சிறு குட்டிக் குழந்தை இருந்ததாம். அதனைக் கண்ணுடி சீசாவுக்குள் போட்டு வைத்திருக்கிறார்கள். சத்திரம் செய் யப்பட்ட குழந்தை உயிருடன் இருக்கின்றது எனத் தெரி கிறது.

சூரத் ஜில்லாவில் கலாசாலைகள் கட்டுவதற்காக 30,000 ரூபாயும், சுற்றுப்பக்கங்களில் வாசக சாலைகள் திறக்க 8,000 ரூபாயும் ஸர் புருஷோத்தம தாஸ் தாகூர்தாஸ் அளித்திருக்கிறாராம்.

உலகத்திலே மிக விலை உயர்ந்த கெடியாரம் போப்பிடமுள்ள நவரத்தினங்களிழைக்கப்பட்ட டைம்பீஸ். அதன் விலை 60,000 பவுன் என்று விலை மதிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற அக்டோபர் மாதம் லக்ஷிமியில் தோன்றிய யுனிவர்சல் வாட்சு கம்பெனி விளம்பரத்தில் கீழ்க்கண்ட வரிகள் விட்டுப்போயின. இந்த விளம்பரத்தைப் படிப்பவர்கள் இவைகளைச் சேர்த்துக் கொள்ளவும்.

(எந்த ஷேப்பிலும் கிடைக்கும் என்பதற்குக் கீழ்)

நெ. 151. மேல்படி ரிஸ்லெட் வாட்சு மேல்படி இனும் பாக்கெட் வாட்சுடன் விலை ரூ. 7—8—0

நெ. 152. 5 வருஷ காரண்டி யுள்ள ரோல்டுகோல்டு 8 கெம்புக்கள் செதுக்கியது பிரிட்ஜ் மூவ்மெண்டு விசித்திரக் கட்டையில் கில் வளையமுள்ள ரிஸ்ட்டு வாட்சு ஷை இனும் பாக்கெட் வாட்சுடன் விலை ரூ. 10—8—0

மூன்று ஆடவர்களும் மூன்று மாதர்களுமாக ஆறு ஜெர்மனியர் மோட்டார் வண்டியில் பூலோகத்தைச் சுற்றி வருகிறார்கள். அவர்கள் பல நாடுகளைச் சுற்றி இரண்டு மாதங்களுக்கு முன் பம்பாய் வந்திருந்தார்கள். இந்தியாவுக்கு கிழக்கே யுள்ள நாடுகளைப் பார்வை யிட்டு விட்டு அமெரிக்கா செல்லுவார்கள். யாத்திரைகளில் தாங்கள் கண்ட பல அதிசயங்களை அவர்கள் குறித்துக் கொண்டார்களாம்.

இங்கிலாந்து தேசத்திலே யுள்ள ரயில்வேக் கம்பெனி அதிகாரிகள் ரெயில் விபத்துகள் நேரிடாம லிருப்பதற்காக அநேக சௌகரியங்கள் செய்துளர். இதன் பலனாக 1925-ல் அங்கு 17,00,000,000 பிரயாணிகளுக்கு ஒருவர் தான் ரெயில் வண்டிகளால் இறந்திருக்கிறார்.

பொது விஷயங்கள்

ஜெர்மனியிலுள்ள கலோன் நகரில் கவிராயர் ரவீந்திர நாத தாகூர் இந்தியாவின் கொள்கை யென்பதைப் பற்றி சென்ற மாதத்தில் ஓர் அரிய பிரசங்கஞ் செய்தார். 2½—ஷில்லிங் முதல் 10—ஷில்லிங் வரை டிக்கட் கொடுத்துச் சுமார் 5000 பேர்கள் பிரசங்கத்தைக் கேட்டார்கள். ஆங்கிலத்தில் சொன்னதை ஜெர்மனியில் ஒருவர் மொழி பெயர்த்துக் கூறினர்.

ஜெர்மனியில் ஆடைகளின்றி நிர்வாணமாக வாழ வேண்டுமென்று ஒரு திருக் கூட்டம் தோன்றி யிருக்கிறது. அதில் ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகத் தங்கள் கொள்கைகளைப் பரப்பி வருகிறார்கள். ஆடை யின்றி யிருப்பதால் உடல் நலமும், அழகும் வளருமென்று அவர்கள் கூறுகிறார்கள்.

திருட்டின் வன்மை. எகிப்திலுள்ள முடிச்சு மாறிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கம் ஸ்தாபித்துக் கொண்டுள்ளார்கள். கெய்ரோவில் ஒரு பிரபல ஆர்மீனியர் அதிகப் பணம் வைத்திருந்த தனது குறிப்புப் புத்தகம் திருட்டுப் போய் விட்டதென போலீஸுக்கு அறிவித்தார். இந்த முடிச்சுமாறிகள் சங்கக் காரியதரிசி உடனே தன்னுடைய பையில் இருந்து திருட்டுப் போனதாக ஆர்மீனியர் சொல்லும் தொகையைக் காட்டிலும் அப் புத்தகத்தில் குறைந்த தொகையிருப்பதாகப் பத்திரிகைகளுக்கு அறிவித்துள்ளார்.

கரிய கண்ணும் அழகான முகமும் வாய்ந்த பிரஞ்சுப் பெண்கள் க்ஷவரக் கொட்டகைகளில் அதிகமாக வேலைக் கமர்ந்திருக்கின்றனர். மகா யுத்தத்திற்குப் பின் ஆண்மக்கள் க்ஷவரத் தொழில் கற்க முன்னைப்போல வருவதில்லை. ஆகையால்தான் பிரஞ்சுச் சிறுமிகள் அந்த வேலையில் அதிகமாக அமர ஆரம்பித்திருக்கின்றனர். வெகு அழகாகவும், மிருதுவாகவும், இப்பெண்கள் வேலை செய்கிறார்கள். ஆண் மக்களுக்கு இது மிகுந்த திருப்தியை உண்டுபண்ணி யிருக்கிறதாம்.

அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் நூறு வயதுக்கு மேற்பட்டவர்கள் ஏறக்குறைய 400 பேர் இருக்கிறார்களாம். பூரணாயுசுள்ள இவர்கள் தம் ஜீவ காலத்தை ஒழுங்காக நடத்துபவர்களா யிருக்க வேண்டும்.

நெசவுத் தொழிலுக்கு உபயோகமாகும் யந்திரத் தறிகளையும் கைத் தறிகளையும் கணக்கெடுத்த போது இங்கிலாந்திலுள்ள லங்காஷைர்ப் பிராந்தியத்தில் மாத்திரம் 191,000 தறிகள் இருப்பதாகத் தெரியவந்தது ; இந்தியாவிலோ 1,44,744 தறிகளாம். ஜப்பான் தேசத்தில் 64,460.

ட்ரௌட் என்னும் ஒரு வகை மீன் ஜலம் பனிக் கட்டியாக உறைந்து போகும் காலத்தில் கெட்டியாக உறைந்து விடுகிறது. மறுபடியும் அந்தப் பனிக்கட்டி சூடுபட்டு உருகி ஜலமாகப் போனதும், அம் மீன் தானும் உணர்வு பெற்று ஜலத்தில் நீந்தி உலவ ஆரம்பித்து விடுகிறது. சைப்பீரியாவில் பனிக் கட்டியால் மூடப் பட்டுக் கெட்டியாகக் காணப்படும் உயிருள்ள மீன்கள் சேகரம் செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. சமையல் செய்யப் பக்குவம் செய்யும் போது தான் அவை உண்மையில் சாகின்றன.

1924ம் வருடத்தில் இங்கிலாந்தின் ஜனத் தொகை 3 கோடியே 87-லட்சத்து 65-ஆயிரம். அதில் 2-கோடியே 2-லட்சம் பேர்கள் ஸ்திரீகள். ஜெர்மனியில் 6-கோடியே 22-லட்சத்து சொச்சம் பேர் இருப்பதில் ஆண்களுடைய தொகையை விடப் பெண்கள் தொகை 20-லட்சம் அதிகமாயிருக்கிறது. ஆனால் ஜனன மரணக் கணக்குகளைப் பார்த்தால் பெண்களைவிட 100-க்கு 7-வீதம் அதிகமாக ஆண்கள் பிறக்கிறார்கள்.

அமெரிக்கா ஐக்கிய நாட்டில் ஒரு மனிதன் சராசரி வயது 60 ; சுவீடனில் 50 ; இந்தியாவிலோ ஒரு மனிதனது சராசரி வயது 23 தானாம். காரணம் என்ன ? சிற்றுயிர்ப் பிணிகள், அறியாமை, சுகாதார வசதிக் குறைவு இம் மூன்றும் சேர்ந்து கொண்டது தான் காரணம் என்கிறார் அமெரிக்க ராணுவ வைத்தியர் ஒருவர்.

"லக்ஷ்மி" பஞ்சாங்கம்

அக்ஷயஸ்ரீ கார்த்திகை–மார்கழிமீ, சாலிவாகன 1849, கலியுகாதி 5028, பசலி 1336, கொல்லம் 1102, ஹிஜரா 1345, இங்கிலீஷ் 1926ஸ்ரீ டிசம்பர்மீ

டிசம்பர்	கார்த்திகை மார்கழி	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
1	16	புத	ஏகா 6-18	சித் 51-30	சித் 60	சர்வ மத்வ ஏகாதசி மழை
2	17	வி	துவா 10-5	சுவா55-35	அ 55	கரிநாள் சுபங்கள் கூடாது
3	18	வெ	திர 12-40	விசா55-18	சித் 60	தான்யங்கள் கட்ட
4	19	சனி	சது 13-33	அனு59-40	சித் 60	அமாவாசை விரதம்
5	20	ஞா	● 13-20	கே 59-55	மர 59	மரண யோகம் [தரிசனம்
6	21	திங்	பிர 11-40	மூல59-10	சித் 60	பேர் மாற்றிவைக்க சந்திர
7	22	செ	துதி 9-8	பூரா57-35	சித் 60	கிணறு சீர்திருத்த பயிர்
8	23	புத	திரி 5-48	உத் 55-18	அ 60	சதுர்த்தி விரதம் [நாகம்
9	24	வி	சது 2-43	திரு52-30	சித் 60	விவாகம் உபநயனம்
10	25	வெ	சஷ் 52-30	அவி49-23	சித் 60	கந்தர்சஷ்டி விரதம் மழை
11	26	சனி	சப் 47-20	சத 45-50	அ 45 மர	நாற்கால் ஜீவன் வாங்க
12	27	ஞா	அ 42-0	பூர 42-18	சி 50 அ	மந்திரம் ஜபிக்க உபவாசம்
13	28	திங்	நவ 36-38	உத் 38-35	சித் 60	கடலைவிதைக்க யாத்திரை
[illegible]	29	செ	தச 31-20	ரே 35-5	சித் 60	மழை இராஜ தரிசனம்
[illegible]	30	புத	ஏகா26-20	அசு 31-45	மர 31 சி	வைகுண்ட ஏகாதசி [தசி
16	மார்கழி 1	வி	து 21-48	பர*29-55	சித் 30 மர	கிருத்திகை விரதம் துவா
17	2	வெ	திர 17-53	*கி 26-53	சித் 28 மர	பாகசாலை அடுப்புபோட
18	3	சனி	சது 14-55	ரோ25-35	அமி 25 சி	பௌர்ணமி
19	4	ஞா	○ 12-53	மிரு 25-28	சித் 60	ஸ்ரீ நடேசர் அபிஷேகம்
20	5	திங்	பிர 12-25	திரு 28-38	சி 26 அமி	ஆருத்திரா தரிசனம்
21	6	செ	துதி13-18	புன 29-15	சித் 60	கரிநாள்
22	7	புத	திரி 15-38	பூச 33-18	சித் 60	சாந்திசெய்யசவுத்திவிரதம்
23	8	வி	சது 19-28	ஆயி 38-48	சித் 38 அமி	நவக்கிர பூசைசெய்ய
24	9	வெ	பஞ் 21-55	மக 45-13	மர 45 சி	கரிநாள்
25	10	சனி	சஷ் 30-23	பூர 53-43	சித் 53 மர	கிருஸ்துமஸ் பண்டிகை
26	11	ஞா	சப் 36-43	உத் 59-43	அமி 60	கரிநாள்
27	12	திங்	அ 42-48	அஸ் 60	சித் 60	பொன்னேர் கட்ட
28	13	செ	நவ 48-8	சித் 45-12	சித் 60	கெற்போடம் ஆரம்பம்
29	14	புத	தச 52-13	சித் 12-50	சித் 60	அவுஷதம் சாப்பிட [கம்
30	15	வி	ஏகா 54-43	சுவா17-38	அமி 17 சி	ஏகாதசி விரதம் பனி அதி
31	16	வெ	து 55-35	விசா20-50	சித் 60	கோடிகட்ட கதிர் அறுக்க

சித்தர்கள் ஓரை சாஸ்திரம்.

(ஜோசியர் குப்புசாமி முதலியார் எழுதியது)

திங்கள்		செவ்வாய்		புதன்		வியாழன்		வெள்ளி		சனி		ஞாயிறு	
காலை		காலை		காலை		காலை		காலை		காலை		காலை	
6-7	சந்	6-7	செவ்	6-7	புத	6-7	குரு	6-7	சுக்	6-7	சனி	6-7	சூரி
7-8	சனி	7-8	சூரி	7-8	சந்	7-8	செவ்	7-8	புத	7-8	குரு	7-8	சுக்
8-9	குரு	8-9	சுக்	8-9	சனி	8-9	சூரி	8-9	சந்	8-9	செவ்	8-9	புத
9-10	செ	9-10	புத	9-10	குரு	9-10	சுக்	9-10	சனி	9-10	சூரி	9-10	சந்
10-11	சூரி	10-11	சந்	10-11	செவ்	10-11	புத	10-11	குரு	10-11	சுக்	10-11	சனி
11-12	சுக்	11-12	சனி	11-12	சுக்	11-12	சந்	11-12	செவ்	11-12	புத	11-12	குரு
12-1	புத	12-1	குரு			12-1	சனி	12-1	சூரி	12-1	சந்	12-1	செவ்
பகல்		பகல்		பகல்		பகல்		பகல்		பகல்		பகல்	
1-2	சந்	1-2	செவ்	1-2	புத	1-2	குரு	1-2	சுக்	1-2	சனி	1-2	சூரி
2-3	சனி	2-3	சூரி	2-3	சந்	2-3	செவ்	2-3	புத	2-3	குரு	2-3	சுக்
3-4	குரு	3-4	சுக்	3-4	சனி	3-4	சூரி	3-4	சந்	3-4	செவ்	3-4	புத
4-5	செ	4-5	புத	4-5	குரு	4-5	சுக்	4-5	சனி	4-5	சூரி	4-5	சந்
5-6	சூரி	5-6	சந்	5-6	செவ்	5-6	புத	5-6	குரு	5-6	சுக்	5-6	சனி
இரவு		இரவு		இரவு		இரவு		இரவு		இரவு		இரவு	
6-7	சு	6-7	சனி	6-7	சூரி	6-7	செவ்	6-7	செவ்	6-7	புத	6-7	குரு
7-8	புத	7-8	குரு	7-8	சுக்	7-8	சூரி	7-8	சூரி	7-8	சந்	7-8	செவ்
8-9	சந்	8-9	செவ்	8-9	புத	8-9	சுக்	8-9	சுக்	8-9	சனி	8-9	சூரி
9-10	சனி	9-10	சூரி	9-10	சந்	9-10	புத	9-10	புத	9-10	குரு	9-10	சுக்
10-11	குரு	10-11	சுக்	10-11	சனி	10-11	சந்	10-11	சந்	10-11	செவ்	10-11	புத
11-12	செ	11-12	புத	11-12	குரு	11-12	சனி	11-12	சனி	11-12	சூரி	11-12	சந்

1. குறிப்பு:—சூரியன் ஓரை கெட்டது, செவ்வாய் ஓரை கெட்டது, சனி ஓரை கெட்டது, இந்த 3 ஓரைகள் நடக்கும் 1-மணி வரையில் எந்த சுபகாரியங்களும் செய்யக்கூடாது செய்தாலும் முடியாது. தடைபடும்.

2. மற்ற சந்திரன், புதன், குரு, சுக்கிரன் இந்த நான்கு ஓரைகள் நடக்கும் மணி 1-க்குள் எந்த சுபகாரியங்களை ஆரம்பித்தாலும், வழி நடந்து போனாலும் கைகூடுவதோடு வன்றி சந்தோஷம் உண்டாகுமென்பதற்கு யாதொரு சந்தேகமும் கிடையாது. சகல நண்பர்களும் லக்ஷ்மி கடாக்ஷம் பெற்று கள் தங்கள் காரியங்களை ஜெயம் பெறலாம். சுப மஸ்து.

கவனியுங்கள் ! கவனியுங்கள் !!

உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கோக்கோஹ
மஹாமுனிவர் அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்.

(ஆபக்காந்த செந்தூரம் உள்பட)

நீங்கள் எந்த நோயினால் பீடிக்கப் படுகிறீர்கள்? அஜீர்ணமா, மார் எரிச்சலா, சோம்பலா, கபங் கட்டலா, இருமலா, மூர்ச்சையா, வயிர் நோதலா, வயிறு உப்பிசமா, பித்தவாய்வா, மேகத்தடிப்பா, மேகவெட்டையா, வெள்ளைவியாதியா, நீர்ச்சுருக்கா? எந்த வியாதியானாலும் ஒரு மண்டலம் சிந்தாமணி லேஹியம் சாப்பிட்டால் அந்த வியாதி இருந்த விடம் தெரியாமல் ஒழிந்து போகும்.

மெலிந்த சரீரத்தைக் கெட்டிப்படுத்தி பலத்தை யளிக்கக்கூடியது இந்த லேஹியம் தான். சாப்பிடச் சாப்பிட அமிர்தம் போல் இருக்கும். பாஷாணக் கலப்பு இல்லை. 196 கடைச் சரக்குகளும் விலை உயர்ந்த பருப்புகளும் தங்கமும் சேர்ந்துள்ளது.

ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்து கொண் டிருக்கின்றன.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடும்படியான ஸெட்டு 1-க்கு ரூ. 5—0—0.

ஸ்ரீ தனம அண்டு கம்பெனி,
பிரும்ம ஸமாஜம்
ஜி. டி. மதராஸ்.

இனிய தமிழ் புத்தகங்கள்

	ரூ.	அ.
சரீர மர்ம சாஸ்திரம் (64-படங்களுடன்) ...	1	0
இரதி மதன சிருங்கார ரகசியம் ...	0	12
சதிபதிகளின் மர்மம் (மானிட மர்ம நூல்) ...	1	0
ஸ்திரீ புருஷ இரகசியம் (இன்பரஸ சாஸ்திரம்) ...	1	0
கைத்தொழில் வணிக ரகசியம் (பல முறைகள் அடங்கியது	1	8
கன்னியா குமாரி அல்லது கலியின் கோலாகலம் ...	0	12
ராஜராஜேஜஸ்வரி அல்லது கற்பின் வெற்றி ...	1	8
மதுராம்பாள் அல்லது மாய சன்யாசி ...	0	12
அமிர்தகுமாரி அல்லது செஞ்சிப் புதையல் ...	1	4
ஜீஜாபாய் அல்லது பொன் சுரங்கத்தின் மர்மம் ...	1	4
மர்மமுகி அல்லது ரஸாயனக் கள்வன் ...	0	12
ஜிநேந்திரன் அல்லது நம்பிக்கை துரோகம் ...	1	8

	ரூ.	அ.		ரூ.	அ.
மதிமுகி ...	0	8	வசீகரன் ...	0	12
வசந்த சமுத்திரம் ...	0	12	தனபதி ...	0	8
தயாபரசுந்தரி ...	0	12	எமகாதகன் ...	0	8
மாணிக்கவல்லி ...	1	0	இருகொலை ரகசியம் ...	1	0
லக்ஷிமி காந்தன் ...	2	0	நாகபூஷணம் ...	0	12
மாணிக்கவாசகர் ...	0	8	பாணபுரத்து வீரன் ...	1	0

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
வெங்கட்டராமய்யர் வீதி, மதராஸ்.

ஒரு வருஷப் பலன்

முழுப் பெயரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அனுப்புவோருக்கு இன்னும் ஒருவருஷ காலத்திற்கு என்னென்ன நடக்குமென்பதைச் சரியாகக் குறித்து ஒரு ரூபாய்க்கு வி. பி. யில் அனுப்பப்படும். பரிக்ஷித்துப் பார்த்தவர்கள் பலர் ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். சிங்கப்பூர், பினாங்கு முதலான வி. பி. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

மகா-௱-௱-ஸ்ரீ K. அப்துல் ரஹிமான், ராவில்ஸ்கிளே, சிங்கப்பூர் 3–9–25 லெட்டரில் எழுதியதாவது: தாங்கள் போன வருஷத்தில் எழுதிய ஜாதகம் அதில் எழுதியது நடந்ததாகச் சொல்லலாம். தாங்கள் தயை செய்து மறு வருஷத்திற்கு ஜாதகத்தை எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நிற்க இந்தக் கடிதத்தில் ரூபாய் 10 இருக்கிறது. அதைத் தாங்கள் பெற்றுக்கொண்டு எழுதுகிற வருஷத்திற்கு ரூபாய் 1 எடுத்துக்கொண்டு பாக்கி ரூபாய் 9 இனமாக இருக்கட்டும்.

ராவ் நாயுடு,
சௌகார்பேட்டை, சென்னை,

குறிப்பு:—இதற்குமுன் நமக்கு ஆர்டர் செய்தவர்களுக்கு தமக்குச் சரியான பதில் கிடைக்காவிட்டால் இப்பொழுது தயை செய்து தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

வீரிய விருத்திக்கு
மதன கோலாகல லேகியம்

இந்த சிறந்த பல விருத்தி லேஹியம் ஒரு பைராகி மஹானால் உபதேசித்து அருளியது. இது உள்ளூரிலும் பினங்கு சிங்கப்பூர் முதலிய வெளியூர்களிலும் பிரசித்தி பெற்று அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொண்டிருக்கிறது. பால்யத்தில் ரோக ஸ்திரீகளினா லுண்டாகும் வியாதிகளையும் இன்னும் உஷ்ணத்தினாலும் பலஹீனத்தினாலும் ஏற்படக்கூடிய சக்திக் குறைவையும் இந்த லேஹியம் நிவர்த்தி செய்வதோடு க்ஷயம், மேகம், சோகை, பாண்டு, ஞாபகக் குறைவு, சோம்பல், தலை வழுக்கை, தலை மயிர் உதிர்தல் மலடு முதலியவைகளை நீக்கி நீத்துப்போன நாதத்தையும் கெட்டிப்படுத்தும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். முறையாகப் புடம்தீர்த்த அசல் வெள்ளி பஸ்பத்துடன்

1–சேர் டப்பி ரூ. 7—0—0 ½–சேர் டப்பி ரூ. 4—0—0

சு. அருணகிரி செட்டியார்.

223, ஈவினிங் பஜார், மூர்மார்க்கட், மதராஸ்.

இனும் ! சுந்தர்சிங் நாவல் இனும் ! !

22-காரட் ரோல்டுகோல்ட் கைக்கடியாரங்கள்.

அழகிய சிறு சைஸ்.



5-வருஷம் உத்தரவாதம்.

இந்தப் புது மாடல், பான்ஸி டயல் உள்ள அழகிய ரிஸ்ட்லெட் கடியாரங்களில் எந்த ஷேப் வாங்கினாலும் ஆர்டருடன் ஆரணி–குப்புசாமி ழுதலியார் எழுதிய 1-4-0 ரூபா விலையுள்ள சுந்தர்சிங் நாவலும் இனாமாகச் சேர்த்து அனுப்பப் படும். சுந்தர்சிங் வாசித்து விட்டவர்கள் அதேவிலையில் வேறு பிரியமான நாவல் எதுவோ அதைத் தெரிவித்தால் சுந்தர்சிங்குக்குப் பதிலாக அதை அனுப்புவோம்.

உடனே எழுதுங்கள். எங்கும் இல்லாத விலை

நுபா **6-8-0** தான்.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,

15-A பீட், அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

மேக வியாதி தொலைந்தது ! கவலைப் படாதீர்கள் !

சகல மேக ராஜாங்க
பைராகி எண்ணெய்

குணமில்லாவிடில் மருந்தின் கிரயம் திருப்பி அனுப்பப்படும்

மேகரோகம் இருபத்தொன்றில் தலை யாசனுவது வெள்ளை. முதலில் மேக ரோகத்திற்கு உற்பத்தி வெள்ளையே தான். அதாவது ஸ்திரீ புருஷர்கள் அதிக சம்போகத்தால் உஷ்ணங் கொண்டு இந்திரிய கமலம் நுட்பத்தினால் நொந்து ரணமாகி கீழ்ப் புண்ணாகிக் குண்டிக்காயைப் பற்றும். அதனால் மேக வெள்ளை உற்பவமாகி ஒரு வித தொத்துப் புண்ணைப் போலாகும். அந்தத் துர் நீர் தேகத்தில் ஊறிப் பரவி மூத்திரக் குழியில் புண்ணாவதால் கொறுக்குப் புண் என்றும் கழுத்து நரம்புகளின் மீது புண்ணாவதால் கண்ட மாலையென்றும், திரேகத்தில் தளும்பாகிக் காய் போல் வருவதால் கிரந்தி, நுணுக்காய்க் கிரந்தி யென்றும் அது வழியே புண் உண்டாகி குழி குழியாக விழுவதால் குழிப் புண் என்றும் உதிரத்தையும் நீரையும் பற்றி இனிப்பைத் தருவதால் மதுமேக மென்றும் வாய்வு சம்பந்தப்பட்டுக் கைகாலைப் பிடிப்பதால் மேக வாய்வென்றும் பெயருண்டாகும். இவைகளைக் கவனிக்காது விட்டு விட்டால் குஷ்டத்திற்குக் கொண்டுபோய் விட்டு விடும்.

இத்தகைய வியாதிகளில் ஏதேனும் ஒன்றினால் சிறிதேனும் கஷ்டப்படுபவர்கள் எங்கள் எண்ணெயைச் சாப்பிடுவார்களாகில் சொல்லியபடி மூன்றே நாட்களில் குண முண்டாகும். இதற்குக் கடினமான பத்தியங் கிடையாது. ஆனால் வியாதியஸ்தர்கள் 7-நாள் அல்லது 14-நாள் அவரவர் வியாதிக்குத் தக்கபடி சாப்பிடுவது நலம். 21-மேக ரோகங்களை சௌக்கியப்படுத்தி அநுபவ முறையாக எங்கள் எண்ணெய் உலகப் பிரசித்தி யடைந்திருக்கிறது.

7-நாள் எண்ணெய் ரூ. **3** **14**-நாள் எண்ணெய் ரூ. **5**

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

வி.பி. சட்ட மில்லாத வெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

எல்லா விடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

ஸ்ரீ தனம் அன் கம்பெனி,
பிரம்ம ஸமாஜம், ஜி. டி. மதறாஸ்.

கிடைப்பது அரிது ! முந்துங்கள் !!

டிடக்டாஸ்-கோப் அல்லது துப்பு (இரகசியம்) அறியும் கருவி.

இருப்பிடத்தி லிருந்தே உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே



இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் முன்னும், உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏக காலத்தில் இரண்டையும் கண்டு கொள்ளலாம். கருவி விலை ரு. 2. தபாற் கூலி அணு 6. F. M. S. ஆர்டர்கள் முன் பணம் ரூ. 3–8–0 அனுப்ப வேண்டும்.

இம்பீரியல் ஏஜன்ஸி, மின்ட் போஸ்டு ஜி. டி. மதராஸ்.

இப்பூவுலக மெங்கனும் புகழ்பெற் றோங்கிய
நமது பி. ஸி. பழனி அண்டு கம்பெனியாரின்
ஸ்பெஷல் பட்டணம் பொடியையும்,
பி. ஸி. பரிமள நஸ்யத்தையும்
ஓர் முறை உபயோகியுங்கள்.

பி. ஸி. பழனி அண்டு கம்பெனியார்,
தபாற் பெட்டி நெ. 230, G. T. மதராஸ்.

24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற

பட்டணம் பொடி.

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகிறது.

N. V. ஷண்முகம் & கோ.,
போஸ்ட் பாக்ஸ் 555,
வண்ணாரப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

சைவ வைஷ்ணவ சம்வாதம்

சிவம் பெரிதா விஷ்ணு பெரிதா எந்தெந்த க்ஷேத்திரங்கள் சிவன் விஷ்ணு ரூபமாகவும், விஷ்ணு லிங்க ரூபமாகவும் மாறி விட்டது, கூத்தாடியது, சிவனார் எங்கே விஷ்ணு எங்கே பிரம்மா சிறைபட்டது, ப்ரணவத்து இரகஸ்யம் அஷ்டாக்ஷரம் பஞ்சாட்க்ஷர இரகஸ்யம் இன்னும் அனேக இரகஸ்யம் பாரதம் பாகவதம் இராமாயணம் கீதை கம்பர் காளமேகம் யாழ்ப்பாணத்து மேலை புலோலி கதிரைவேற் பிள்ளை முதலியவர் நூலின் ஆதாரவைக் கொண்டு எழுதிய புத்தகம் 120-பக்கம் உள்ளது 8-அணு. சிலவு அணு-5. 3-புஸ்தகம் சிலவு உள்பட ரூ. 1-10. விலாசம்:

மாதவ பிரதர்ஸ், மவுண்ட் ரோட், மதராஸ்.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதன் உபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப் பிரசாதினி என்றும் அதி சிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப்பவிரணம், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவி னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப் படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3–0–0
சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10–0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

A. **S.**

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 டிஷடஜன் 1-க்கு ரூ. 2-4 டிஷ சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 டிஷடஜன் 1-க்கு ரூ. 2 டிஷ சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,
106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்

...ரும்பவும்

புதிய ஸ்டாக்!

...க கொள்ளுங்கள்!   முந்திக் கொள்ளுங்கள்!!

குஞ்சங் கட்டிய

...வள்வள அமெரிக்கன் ஸில்க்

முன் எங்களிட மிருந்த 1500 பட்டுகளும் வெகு சீக்கிரத்தில் செலவாகி விடவே அநேக நண்பர்கள் தரு வித்து உபயோகப் படுத்த முடியாது போயிற்று. திரும்ப வும் புதிய ஸ்டாக் வந்திருப்பதால் முந்திக் கொள்ளுங்கள்! "கிடைக்க வில்லையே!" என்று வருந்த வேண்டாம்.

கைவசமே சுமார் 500-க்கு ஆர்டர்கள் இருப்பதால் உங்கள் ஆர்டர்களையும் அடுத்த மெயிலிலேயே அனுப்பி விடுங்கள்.

விலை ரூ. 6—8—0.

லக்ஷ்மிக்குப் புதிதாகச் சேருகிற சந்தா நேயர் களுக்கும் பழைய சந்தா நேயர்களுக்கும் பாக்கிங் தபால் செலவு இனம்.

பழைய சந்தா நேயர்கள் ஆர்டர் செய்யும் போது சந்தா நெம்பர் குறிப்பிடவும்.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99,   MADRAS.

N. S. S.

தேக ஆரோக்யமே

சிறந்த பூஷண

குளிர் காலம் தொடங்கி விட்டது. குளிர் முதலியவைகளி னின்றும் தங்கள் தேக ஆரோக்ய காப்பாற்றிக் கொள்ள தங்களிடம் ஒரு முதல் கம்பளிப் போர்வை யிருக்கிறதா? தேக சௌ கொண்டே, நமக்கு வேண்டும் மற்ற சாதனங்களைத் கொள்ள முடியும்.

எங்களின் வாடிக்கை நண்பர்களின் க்ஷேமத்தைக் கவனிக்க நாங்களும் கடமைப் பட்டிருப்பதால் முதல் தரமான கம்பளிப் போர்வை ஸ்டாக் செய்திருக்கிறோம். இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள்.

1. ஜெர்மன் கம்பிக் கரைப் போர்வை.

உயர்ந்த கம்பளி; மிருதுவான நெசவு; நாலு பக்கங்களிலும் கம்பிக் கரைகள் போட்டது. எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். விலை ரூ. 10 - 8 - 0

2. பூக்கரை (ஜெர்மன்) போர்வை.

நாலு பக்கம் கரைகளுக்கு உயர்ந்த பட்டுப் பூவேலை செய்தது. விலை ரூ. 12—0—0

3. காஷ்மீர் கம்பளிப் போர்வை.

அநேக விதமான கலர்கள். பட்டைப் போல் மிருதுவான நெசவு. விலை ரூ. 12—8—0

கே. எஸ். முத்தையா கம்பனி

(ல) தபால் பெட்டி 99

சென்னை.

N. S. S.

Printed by P. R. Rama Iyar & Co., Madras and Published by K. S. Su